பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 39
கதிர் : 283

புதன்கிழமை
04 செப்ரெம்பர் 2024

ஆவணி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை

முச்சந்தி முரளி



"ரணிலரர் இப்பிடி காலைவாராட்டித்தான் ஆச்சரியம் கண்டியளோ"

# நல்லவற்றுக்காக மட்டுமே நிறைவேற்றதிகாரம்



## மக்களுக்குச் சுமையாக மாறேன்

## தேரர்களிடம் சஜித் உறுதியளிப்பு

**அநுராதபுரம், செப்ரெம்பர் 4**

**எனது ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றதிகாரம் பயன்படுத்தப்படுகின்றதென்றால் அது நல்ல விடயங்களுக்காக மட்டுமாகத்தான் இருக்கும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

15

# மோசடியாளர்களை அநுர சிறையிடுவார்

## ஆனால் நாட்டை மீட்க அவரால் முடியாது

## விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 4

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க வெற்றிபெற்று ஜனாதிபதியானால் நாட்டைச் சூறையாடியவர்களை – திருடியவர்களைப் பிடித்துச் சிறையில் அடைப்பார். அது உண்மையான

16

# எங்களோடு இணங்கும் விடயங்களை செய்யாவிட்டால் நாட்டுக்கு அழிவுதான்

## சஜித்தை எச்சரிக்கிறார் சுமந்திரன்

கொழும்பு, செப். 4

எங்களோடு இணங்குகின்ற விடயங்களை முழுமையாக நிறைவேற்றவேண்டும். அவ்வாறு இல்லையேல் இந்நாடு அழிவுப் பாதைக்குச் செல்லும் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஒரு எச்சரிக்கையாகச் சொல்லிவைக்க விரும்புகின்றேன் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

16

# மாகாணசபைத் தேர்தல் திருத்தம் மூன்றாம் விவாதம் ஒத்திவைப்பு

## காலைவாரினாரா ரணில்?

கொழும்பு, செப். 4

8 ஆண்டுகளாக நடைபெறாமல் உள்ள மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான, தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் தனிநபர் சட்டவரைவு மீதான மூன்றாம் விவாதம் நேற்று இடம்பெற தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும் இறுதி நேரத்தில் அது ஒக்ரோபர் மாதத்துக்கு – அதாவது ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்ன

15

# திடீர் சுகவீனம்: பெண் இறப்பு!

யாழ்ப்பாணம், செப். 4

திடீர் உடல்நலக் குறைவு காரணமாக பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். பருத்தித்துறை இன்பர்சிட்டிப் பகுதியைச் சேர்ந்த சாவித்திரி வடிவழகன் (வயது - 61) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

திடீர் சுகவீனம் காரணமாக, அலறித் துடித்த அந்தப் பெண் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது அவர் முன்னதாகவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா இறப்பு விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார்.

(அ-ம-100)

# தமிழர்களை ஓரணியாக்கவே பொதுவேட்பாளர் களமிறக்கம்!

## தேர்தல் அறிக்கையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 4

தமிழ்ப் பொதுவேட்பாளராக சங்குச் சின்னத்தில் களமிறங்கியுள்ள அரியநேந்திரனுக்கு வழங்கப்படும் வாக்குகள் தமிழ்மக்கள் தங்களுக்குத் தாங்களே வழங்கும் வாக்குகள்தான். தமிழ் மக்களின் விடுதலைக்காக தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்தவர்களைக் கௌரவிக்கும் வாக்குகள்தான் என தமிழ்ப் பொதுவேட்பாள

15

# ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் வாக்களிப்பு இன்று!

கொழும்பு, செப். 4

ஜனாதிபதித் தேர்தலுக்கான அஞ்சல்மூல வாக்களிப்பு இன்று ஆரம்பமாகவுள்ளது.

15

# புதுமாற்றத்துடன் அடுத்த அமர்வு!

கொழும்பு, செப். 4

செப்ரெம்பர் மாதத்துக்குரிய நாடாளுமன்ற அமர்வு இன்றுடன் நிறைவுபெறும் நிலையில், ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னரே அடுத்த நாடாளுமன்ற அமர்வு இடம்பெறவுள்ளது.

15

# மருத்துவர்கள் நேற்று நாடளாவிய போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 4

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, மருத்துவர்கள் நேற்று நாடளாவிய ரீதியில் போராட்டங்களை முன்னெடுத்தனர். இந்தப் போராட்டங்களின் ஒரு பகுதியாக, வடக்கு - கிழக்கில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளிலும் மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

மருந்துப் பற்றாக்குறைகள் தொடர்பில் மருத்துவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் உடன் நிறைவேற்றப்பட வேண்டும், எவ்வித முன்னறிவிப்பும் இன்றி முறையற்ற விதத்தில் மருத்துவர்களுக்கு

16

# விவசாயக் கடன்கள் அனைத்தும் தள்ளுபடி

## தபால் வாக்களிப்புக்கு முன்பாக அரசாங்கம் இப்படி அறிவிப்பு

கொழும்பு, செப். 4

விவசாயிகளினால் விவசாய செயற்பாடுகளுக்காக வாங்கிய அனைத்துப் பயிர்ச்செய்கைக் கடன்களையும் உடனடியாக தள்ளுபடி செய்ய அரசு முடிவு செய்துள்ளது. விவசாய சங்கங்கள் பலவும் விடுத்த கோரிக்கைகளை ஏற்று விவசாயிகளுக்கு நிவாரணம் மற்றும் ஆதரவு வழங்கும் வகையில் அரசு இந்த முடிவை எடுத்துள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்துள்ள செய்திக்

16






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களை அழிப்பதற்கு சிங்களவர் தேவையில்லை

## அன்னராசா காட்டம்

**யாழ்ப்பாணம், செப்.4**

**தமிழர்களைக் கூறுபோட்டு, தமிழர்களுடைய இருப்புகளை அழிப்பதற்கு ரணிலோ, சஜித்தோ, அநுரவோ அல்லது நாமல் ராஜபக்சவோ தேவையில்லை, எமது கட்சித் தலைவர்களே போதும். இவர்கள் தமிழ் மக்களது பிரதிநிதிகள் என்று கூறி எவ்வாறு சர்வதேச சமூகங்களிடம் பேசப் போகின்றார்கள்?**

-இவ்வாறு வவுனியாவில் நிறைவேற்றப்பட்ட தமிழரசுக் கட்சியின் தீர்மானம் குறித்து வடக்கு மாகாண மீனவ அமைப்பின் பிரதிநிதியான அன்னலிங்கம் அன்னராசா ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆயுதம் மௌனிக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டுக்கு பிற்பாடு இன்று வரைக்கும் தமிழரசுக் கட்சி தமிழருடைய உரிமைகளை மீட்பதற்கு உளரீதியாகச் செயற்படவில்லை. வாய் ரீதியாக மக்களுக்கு ஒன்றை சொல்வதும் அரசாங்கத்துக்கு ஒன்றைச் சொல்வதுமாக இருக்கின்றது.

இப்போது தமிழரசுக் கட்சி எடுத்துள்ள முடிவை தமிழ் மக்களின் ஒற்றுமையையும், ஐக்கியத்தையும் குலைப்பதற்கான அடித்தளமாகத்தான் பார்க்கின்றோம்.

எங்களை அழிப்பதற்கு சிங்கள வர்கள் தேவையில்லை எங்களது தலைவர்களே போதும். தமிழ் சிவில் சமூகமாக நாங்கள் எடுத்த பொது வேட்பாளர் என்ற முயற்சியை தங்களுடையசுயலாபத்துக்காகவும், தங்களது மதுபான நிலையை அனுமதிப் பத்திரத்துக்காகவும் உதாசீனப்படுத்துவது தமிழினத்துக்கு தலைகுனிவே.

எனவே இவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு சங்குச் சின்னத்துக்கு வாக்களித்து எமது ஒற்றுமையை நிலைநாட்டுவோம் அதுவே எமக்கான தீர்வு- என்றார். (ச-27)

# சமத்துவக்கட்சி சஜித்துக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், செப்.4

ஜனாதிபதித் தேர்தலில் சமத்துவக் கட்சியானது ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதற்குத் தீர்மானித்துள்ளது என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மு. சந்திரகுமார் அறிவித்துள்ளார்.

தமிழ் மக்களினதும் இலங்கைத் தீவினதும் எதிர்கால நன்மைகளைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எமக்கு ஓரளவு திருப்தியளிக்கக் கூடியவகையில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரான சஜித் பிரேமதாஸவின் உத்தரவாதங்களே அமைந்தன என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-214,113)

# தமிழரசின் தீர்மானம் தமிழரைப் பாதிக்காது!

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 4

தமிழரசுக் கட்சியின் மத்திய குழு சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவிக்க முன்னரே மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் எனத் தீர்மானித்துவிட்டனர் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழரசுக் கட்சியினுடைய தீர்மானம் தொடர்பில் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை அது அவர்களின் கட்சி சார்ந்த விடயம்.

மக்கள் வரிசை யுகத்தில் பட்ட துன்பத்தை இன்னும் மறக்கவில்லை அதனை நீக்கிய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே. ஜனாதிபதித் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் தீர்மானம் ரணில் விக்கிரமசிங்கவையோ அல்லது தமிழ் மக்களையோ பாதிக்காது- என்றார். (ச-27)

# ஊழலுக்கு முடிவு கட்டுவோம்!

## கூறுகிறார் நாமல்

கொழும்பு, செப்.4

மஹிந்த ராஜபக்ச மூன்றாண்டுகளில் போரை முடித்ததுபோல, ஊழல், மோசடிகளுக்கும் மூன்றாண்டுகளுக்குள் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பொறுப்புகளைக் கைவிடாத மற்றும் 30 வருடகால போரை முடித்த அரசியல் சக்தியே எமது கட்சி.

சூழ்ச்சிகள் மூலம் எமது சக்தியை தோற்கடிக்க முற்பட்டாலும் நாடு பற்றிச் சிந்தித்து தீர்மானங்களை எடுக்கும் கட்சியே எமது கட்சியாகும்.

ஊழல், மோசடி என்ற கோஷம் அரசியல் களத்தில் இருந்து முற்றாக நீக்கப்படும். 3 ஆண்டுகளுக்குள் இதற்குரிய நடவடிக்கையை முன்னெடுக்கமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# தூரநோக்குச் சிந்தனையுடன் புதிய இலங்கை உருவாகும்

## ரணில் விக்கிரமசிங்க உறுதியளிப்பு

கொழும்பு, செப். 4

நாட்டில் வலுவான பொருளாதாரம் உருவாக்கப்படவேண்டும். அந்தப் பொருளாதாரத்தினூடாக இந்த நாட்டு மக்கள் சிறந்த வாழ்க்கை வாழவேண்டும்.

-இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 73 ஆவது தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டுக்காக அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படமுடியும் என்பதை தற்போதைய அரசாங்கம் நிரூபித்துள்ளது. அதன்படி புதிய இலங்கையை உருவாக்கும் போராட்டத்தில் நாம் இறங்கியுள்ளோம்.

கடந்த இரண்டு வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தினோம். தற்போது நாட்டை வலுவாக முன்னோக்



கிக் கொண்டு செல்லவேண்டிய அவசியம் எழுந்துள்ளது. இந்த நாடு எப்போதும் பிச்சை எடுக்கும் நாடாக இருக்க முடியாது.

எமக்குத் தேவையான பணத்தைத் தேடிக்கொள்ளவேண்டும். நாட்டில் வலுவான பொருளாதாரம் உருவாக்கப்பட வேண்டும். விவசாய நவீனமயமாக்கல் திட்டம் ஏற்கனவே கிராமங்களைச் சென்றடைந்துள்ளது. எதிர்காலத்திலும் பிரச்சினைகளுக்கு ஈடுகொடுத்து நாட்டை கட்டியெழுப்ப ஒன்றிணைவோம். வெற்றி பெறுவோம் - என்றார். (ச)

# அரசியல் கட்சிகளின் பரப்புரைகள் அனல்பறப்பு



யாழ்ப்பாணம், செப்.4

ஜனாதிபதித் தேர்தலுக்குரிய பரப்புரை நடவடிக்கையை இன்னும் 14 நாள்களுக்கே முன்னெடுக்கமுடியும் என்பதால் பிரதான அரசியல் கட்சிகள் யாவும் பரப்புரை போரை தீவிரப்படுத்தியுள்ளன.

மாவட்ட, தொகுதி மற்றும் கிராமிய மட்டத்திலான கூட்டங்கள் தற்போது இடம்பெற்றுவரும் நிலையில், அடுத்த வாரம் முதல் இறுதிக்கட்ட சூறாவளிப் பிரசாரம் இடம்பெறவுள்ளது.

வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதற்கிடையில் சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் கட்சிகள் தீவிர பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றன. (ச-44)



# நாடாளுமன்றை உடன் கலைப்பேன்

## அநுர தெரிவிப்பு

கொழும்பு, செப். 4

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைப்பேன் என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தலில் வெற்றி பெறுவது மட்டுமல்லாமல் அதிகாரத்தைப் பாதுகாப்பதும் அதிகாரத்தை நிலைநாட்டுவதும் முக்கியம்.

இந்த ஊழல்வாதிகளுடன் ஒரு நாள் கூட சேர்ந்து செயற்படவிரும்பவில்லை அதற்கான காரணங்களும் இல்லை. புதிய அமைச்சரவை மற்றும் செயலாளர்களை நியமிக்கும் அரசமைப்பு அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது.

எமது ஆட்சியின் கீழ் தற்போதுள்ள அமைச்சரவை மற்றும் பிரதமர் உடனடியாக நீக்கப்படுவார்கள். அதற்குத் தேவையான அனைத்து சட்ட ஆலோசனைகளும் ஏற்கனவே இடம்பெற்றுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமான நாடு
அழகான வாழ்க்கை

# நாடு அநுரவோடு



## வாக்குறுதி அல்லாத கடப்பாடு

நிலவுகின்ற அனைத்து சம்பள முரண்பாடுகளையும் நீக்குகின்ற அல்லது குறைக்கின்ற அத்துடன் ஊழியரை ஊக்குவிக்கின்ற தேசிய சம்பள கட்டமைப்பொன்று துரிதமாக நிறுவப்படும்.

அரச பிரிவின் ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு மற்றும் இடமாற்றங்கள் அரசியல் தலையீடுகளின்றி தகைமைகள் மற்றும் திறன்களின் அடிப்படையில் மாத்திரம் மேற்கொள்ள அவசியமான அனைத்து நடவடிக்கைகளும் துரிதமாக மேற்கொள்ளப்படும்.

ஒழுங்கமைந்த E- Government முறைமையொன்றுக்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல். அனைத்தையும் ஒருமுகப்படுத்திய முறைமையொன்றுடன் தொகுத்தல் மற்றும் அரச சேவையின் டிஜிட்டல் எழுத்தறிவினை மேம்படுத்துதல்.

பெண்களுக்கு நிறைவேற்று மற்றும் முகாமைத்துவ துறைகளில் பயன்விளைவு மிக்கவகையில் தொழிலில் ஈடுபடுவதில் நிலவுகின்ற அனைத்து விதமான தடைகளையும் நீக்குதல்.

வயது 40 வருடங்களுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இலவசமான வருடாந்த சுகாதார பரிசோதனைகள்.

தொழில்முனைவோருக்கு அநீதி ஏற்படாத வகையில் உழைக்கும்போதே செலுத்துகின்ற வரியை திருத்தியமைப்பதற்கான

அக்ரஹார நன்மைகளை பலப்படுத்துதலும் செலுத்துகின்ற வாய்ப்புகளை விரிவாக்குதலும்.

05 வருடங்களுக்கு குறைவான பிள்ளைகள் அல்லது 80 இற்கு மேற்பட்ட பெற்றோர்களை கவனித்துக்கொள்வதற்காக அடிப்படைச் சம்பளத்தின் 25% உடனான ஒரு வருடகால லீவு.

நிலவுகின்ற பதவிகளையும் கடமைகளையும் மீளாய்வுசெய்து குறித்துரைத்த கடமைகள் மற்றும் இலக்குகளைக் கொண்டதாக ஒவ்வொரு பதவிக்கும் அங்கீகரிக்கப்பட்ட தொழில்வாண்மைநிலையையும் மதிப்பீடு செய்தலையும்கொண்ட சேவைப் பிரமாணக் குறிப்பினை உருவாக்குதலும் நிலவுகின்ற சேவைப் பிரமாணக் குறிப்புகளை இற்றைப்படுத்துதலும்.

ஒவ்வொரு 06 மாதங்களுக்கும் ஒருதடவை வாழ்க்கைச் செலவினை பரிசீலனைசெய்து அதிகரித்திருப்பின் சம்பளத்தை அதற்கிணங்க சீராக்குதல்.

இலங்கையை வீழ்த்தியுள்ள வங்குரோத்து நிலைமையிலிருந்தும் சீரழிவிலிருந்தும் கட்டியெழுப்பவும், நவீன அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றியமைக்கவும், பலம்பொருந்திய, பயன்விளைவுமிக்க, வினைத்திறன்கொண்ட, மக்களுக்கு நட்புறவுமிக்க அரச சேவையொன்று தேவை என்பதை நாங்கள் நம்புகிறோம். அரச சேவை பற்றிய தவறான கருத்துக்களை கட்டியெழுப்பி, அரச நிறுவனங்களை விற்றுத்தீர்த்து, அரச சேவையை கரைத்து விடுவதற்காக இதுவரை நாட்டை ஆட்சி செய்த குழுக்கள் நடவடிக்கை எடுக்கையில் நாங்கள் அரச சேவையை விருத்தியடைந்த நாடொன்றின் மட்டத்திற்கு உயர்த்திவைக்க அவசியமான நடவடிக்கைகளை எடுப்போம்.



අනුර කුමාර දිසානායක
அநுர குமார திசாநாயக்க
Anura Kumara Dissanayake


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெல்லிப்பழை துர்க்காதேவிக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், செப்.4

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா இன்று புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பன்னிரெண்டு நாள்கள் நடைபெறும் உற்சவங்களில் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை திருமஞ்சத் திருவிழாவும், 12 ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பரத் திருவிழாவும், 14 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ரி-66)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** நன்மையான நாள். உங்கள் செயல்களில் ஏற்பட்ட சிக்கல்கள் விலகும். உடல்நிலை சீராகும். கவனமாக செயற்பட வேண்டிய நாள். உறவினர்களால் சில பிரச்சினைகளை சந்திப்பீர். வருமானத்தால் வளம்காணும் நாள். உங்கள் செயல் வெற்றியாகும்.

**இடபம்:** வேலை பளு அதிகரிக்கும் நாள். வரவு இழுபறியாகும். உங்களது முயற்சி தள்ளிப்போகும். தடைகளை சந்திக்கும் நாள். உங்கள் வேலையை திட்டமிட்டபடி சரியாக செய்து முடிப்பீர். தேவைகள் நிறைவேறும் நாள். அலைச்சல் அதிகரிக்கும்.

**மிதுனம்:** முயற்சியால் முன்னேற்றம் காணும் நாள். வியாபாரத்தில் இருந்த மந்தநிலை விலகும். கவனமாக செயற்படவேண்டிய நாள். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியில் தடையும் தாமதமும் ஏற்படும்.ஆதாயமான நாள்.

**கடகம்:** கொடுத்த வாக்கை காப்பாற்றும் நாள். உங்கள் எதிர்பார்ப்பு எளிதாக நிறைவேறும். விருப்பம் தள்ளிப்போகும் நாள். குடும்பத்தில் நெருக்கடி அதிகரிக்கும். எதிர்பார்த்த வருமானம் இழுபறியாகும்.யோகமான நாள்.

**சிம்மம்:** நினைத்த வேலைகளை நடத்தி முடிக்கும் நாள். வியாபாரத்தில் இருந்த நெருக்கடி நீங்கும். குழப்பத்துக்குள் ஆளாகும் நாள். மனதில் இனம் புரியாத குழப்பம் ஏற்படும். செயல்களில் தடுமாற்றம் உண்டாகும். ஆதாயமான நாள்.

**கன்னி:** வரவு - செலவில் கவனம் செலுத்த வேண்டிய நாள். திடீரென்று வெளியூர் பயணம் ஏற்படும். எதிர்ப்பை சந்திக்கும் நாள். மனதில் தேவையற்ற குழப்பங்கள் தோன்றும்.

**துலாம்:** வியாபாரத்தில் லாபம் காணும் நாள். உங்கள் செயல்களில் வேகம் இருக்கும். நட்பும் பகையாகும் நாள். வீண் வாக்குவாதங்களுக்கு இன்று இடமளிக்கவேண்டாம். இலாபமான நாள். எதிர்பார்த்த தகவல் வரும்.

**விருச்சிகம் :** வருவாயால் வளம் காணும் நாள். தொழிலில் இருந்த நெருக்கடிகள் விலகும். அலைச்சல் அதிகரிக்கும். செயல்களில் தடை உண்டாகும். வருவாயால் வளம் காணும் நாள்.

**தனுசு:** முன்னேற்றமான நாள். கடந்தகால அனுபவத்தைக் கொண்டு முயற்சியில் வெற்றி காண்பீர். குழப்பத்துக்கு இடம் கொடுக்காமல் செயற்பட வேண்டிய நாள். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினை விலகும்.

**மகரம்:** ஆதாயமான நாள். சங்கடங்கள் நீங்கும். உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். விழிப்புடன் செயற்படவும். புதிய முயற்சி, வெளியூர் பயணங்களை தவிர்ப்பது நல்லது. கடவுள் அருளால் முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்:** ஆதாயமான நாள். நண்பர்கள் ஒத்துழைப்புடன் உங்கள் முயற்சி வெற்றியாகும். வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் விலகும் என்றாலும் வரவு செலவில் கவனம் தேவை. வரவால் வளம்காணும் நாள்.

**மீனம்:** முயற்சி வெற்றியாகும் நாள். வியாபாரத்தில் போட்டியாளர்களால் ஏற்பட்ட சங்கடம் விலகும். கவனமாக செயற்பட வேண்டிய நாள். உங்கள் விருப்பம் நிறைவேறும் நாள். இழுபறியாக இருந்த வழக்கு முடிவுக்கு வரும்.

# குழு இசையரங்கு

யாழ்ப்பாணம், செப்.4

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழாவை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்று வரும் உற்சவகாலத் தெய்வீக இசை அரங்கு நிகழ்வுகள் வரிசையில் தீர்த்தத் திருவிழாவான நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை யாழ். இந்தியத் துணைத் தூதரக இசைத்துறை மாணவர்களின் குழு இசையரங்கும், வவுனியா நிருத்திய நிகேதன் நுண்கலைக் கல்லூரி மாணவிகளின் நிருத்தியார்ப்பணம் நிகழ்வும் நடைபெற்றன. (ச-45-66)

# 'கலாதீபம்' இதழ் வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.4

கோப்பாய் ஆசிரியர் கலாசாலைச் சமூகத்தால் மாதாந்தம் வெளியிடப்படும் 'கலாதீபம்' மின் இதழ் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியாகியுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் கலாசாலையில் இடம் பெற்ற நிகழ்வுகளின் தொகுப்பாக இந் நூல் வெளிவந்துள்ளது.

இதனை noolaham.org என்ற இணையத்தளத்தில் கணினியில் தரவிறக்கம் செய்து பார்வையிடலாமெனக் கலாசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ச-66)

# வாராந்த சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப்.4

சைவவாழ்வியலில்திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் வாராந்தத் திருவாசகச் சொற்பொழிவுத் தொடர் - 21 பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

"மாணிக்கவாசகரும் கோயில் மூத்த திருப்பதிகமும் " எனும் விடயப்பொருளில் சைவப்புலவர் பிரசங்க பூஷணம் பொன். சந்திரவேல் சொற்பொழிவாற்றுவார்.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-25)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.4

முனைவர் ச. மனோன்மணியின் அகவை எண்பதில் எளிமையான உரையும் விளக்கமும் கொண்ட திருக்குறள் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன சுவாமிகள் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரையையும் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் வாழ்த்துரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பி, சிறப்பு அதிதியாக நன்நடத்தை மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாசன் மற்றும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ச)

# எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள்மீது தாக்குதல்

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா,செப். 4

வவுனியாபண்டாரவன்னியன்சதுக்கப்பகுதியில்அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்ப மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் அடங்கிய குழு, சம்பவ இடத்தில் பொலிஸார் நின்றிருந்தபோதும் அங்கு கடமையிலிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் நடந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

குறித்த வன்முறைக்கும்பல் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியரோடு தர்க்கப்பட்ட நிலையில் திடீரென அதிலொருவர் அங்கு கடமையிலிருந்த எரிபொருள் நிரப்பு ஊழியர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

அத்துடன் சம்பவ இடத்தில் இருந்த இரு போக்குவரத்துப் பொலிஸாருடனும் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதனையடுத்து அங்கு பொலிஸார் வரவழைக்கப்பட்ட நிலையில் தாக்குதல் நடத்திய மூவரும் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது காயமடைந்த எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-110,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேல் தாங்கிய மெய்யடியார்!



அலங்காரக் கந்தனாக நல்லூரம்பதியினிலே வீற்றிருக்கும் நல்லை கந்தப் பெருமானின் வருடாந்த மஹோற்சவத்தின் தீர்த்தத் திருவிழாவின்போது நல்லூரான் மெய்யடியார் ஒருவர் வேலினை தாங்கியவாறு ஆலயத்தை வலம் வந்து வழிபட்டிருந்தார். (ச-100)

## குழந்தைகளுக்குக் கட்டுப்பாடு

சுவீடனில் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள், திறன்பேசித் திரைகளையும், தொலைக்காட்சித் திரைகளையும் பார்ப்பதற்கு அனுமதிக்க வேண்டாம் என்று பொதுச்சுகாதாரத்துறையால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம)



## வீதியோர வியாபாரிக்கு சுகாதாரப்பிரிவு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப்.4

பருத்தித்துறை பிரதான வீதியோரத்தில் தற்காலிகமாகச் செயற்பட்டு வரும் பழக்கடையில் சோளன் அவித்து விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரிபிரிவு உத்தியோகத்தர்களால் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச்சோதனை நடவடிக்கையின்போது உணவுப் பொருள்களை கையாளுதல் தொடர்பான மருத்துவச் சான்றிதழ் பெறாமை, அவித்த சோளன்களை கண்ணாடிப் பெட்டியில் பாதுகாப்பான முறையில் வைத்து விற்பனை செய்யாமை உள்ளிட்ட சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படாமை கண்டறியப்பட்டன. இதையடுத்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டவருக்கு, சுகாதார நடைமுறைகளை சரிசெய்து பாதுகாப்பான முறையில் வியாபாரம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டதுடன். இவை கவனத்தில் கொள்ளப்படாதுவிடில் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டது. (ச-25-100)

## நல்லூர் தீர்த்தோற்சவத்துக்கு நூற்றுக்கணக்கான காவடிகள்



கொழும்பு, செப்.4

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூருக்கு நேற்று தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு நூற்றுக்கு மேற்பட்ட தூக்கு காவடிகள் படையெடுத்து வந்திருந்தன.

எட்டுத்திக்கில் இருந்தும் நல்லையம்பதி நோக்கி ஒற்றைக்காவடி, இரட்டைக் காவடி, முக்காவடி, வாள் காவடி என பற்பல வகையான தூக்குக் காவடிகள் எடுத்து பக்தர்கள் நேர்த்திக்கடன்களைநிறைவேற்றியிருந்தனர். (ச-100)


# ருஹுணு மக்கள் கூட்டணி

(இலங்கை மக்களுக்கான முன்னணி)

ஜனாதிபதித் தேர்தல் 2024



- வருகின்ற ஜனாதிபதி தேர்தலில் பெரும்பாலான ஜனாதிபதி வேட்பாளர்களின் கருத்து என்னவென்றால் தற்சமயம் இருக்கும் பொருளாதார நெருக்கடியயை முடிவுக்கு கொண்டுவரும் ஒரே தீர்வு அவர்களிடம்தான் இருக்கிறது என்று. ஆனால் எங்கள் பார்வை அதை விட வேறுபட்டது. களவு, ஊழல் மற்றும் பொருளாதார நெருக்கடி என்பன நெருக்கடிகளின் எல்லாம் இறுதியான கட்டம் என்பது தான் என் பார்வை. எம்முடைய தாய் திருநாடு சுதந்திரம் பெற்று 76 ஆண்டுகள் ஆகியும் ஒரு ஒன்றுபட்ட மக்களாக அமைக்க இயலவில்லை. இதிலிருந்துதான் இந்த பாரிய சரித்திரம் வாய்ந்த அரசியல் நெருக்கடி உருவாக தொடங்கியது.
- இந்த நெருக்கடியை ராஜதந்திர ரீதியாக அந்த தருணத்தில் தீர்க்க முடியாமல் போனதில் தான், எமக்கு ஒரு பாரிய உள்நாட்டு கொடிய யுத்தத்திற்கு முகம் கொடுக்க நேரிட்டது. அதன் பிரதிபலிப்பு தான் தலை தூக்கிய ஊழல், களவு மற்றும் லஞ்சம் என்பன ஆட்சி செய்ய துவங்கியது. இந்த பிரச்சினைக்கு காரணம் அன்றைய அரசியல் கட்டமைப்பில் உள்ள நிர்வாகத்துறையின் வீழ்ச்சி தான். இவ்வாறான வரலாற்று நெருக்கடியான பிரச்சினைக்கு தீர்வு காணாமல் பின் தள்ளி, பின் தள்ளி அது இறுதியில் உக்கிப் போய் புரையோடி கடைசியில் கோவிட் தொற்று மற்றும் முறையற்ற கரிம (carbon) உரத் திட்டத்தின் விளைவாக, ஒரு பாரிய பொருளாதார நெருக்கடியான சூறாவளியை எம் தலை மீது சுமத்தப்பட்டுள்ளது. அப்படியென்றால், இந்த நெருக்கடியை மூன்று முக்கிய பாதைகளியினூடாக அதி வேகத்துடன் சென்று செயல்படுத்த வேண்டும்.
- தேசிய பிரச்சினைகளை ராஜதந்திர ரீதியில் தீர்ப்பது, ஒரு அரசியல் நிர்வாக கட்டமைப்பொன்றை உருவாக்க வேண்டும் (ஒரு புதிய அரசியலமைப்பு திட்டத்தை உருவாக்குதல்) மற்றும் பொருளாதார சீர்கேடுகளை விசாரித்து வழிவகுக்கும் முறை ஆகிய இம் மூன்று முறையான பாதைகள் மூலம் நாம் முன் விரைந்து, இந்த பாரிய சரித்திரம் வாய்ந்த பொருளாதார நெருக்கடியை எமது நிர்வாகத்தின் கொண்டு வந்தேயாகவேண்டும். இதை நீங்கள் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். அதை புரிந்துகொண்டு தேவையான வழிமுறைகளை நாம் பின்பற்றவில்லை என்றால், யார் அதிகாரத்திற்கு வந்தாலும், அவர்களுக்கு ஆட்சிபீடத்தில் அமரமுடிவது ஆகக் கூடியது ஒரு வருடம் தான் என்று நான் தீர்க்கமாக கூறுவதுடன், இந்த பாரிய நெருக்கடிக்கு நாம் மேலும் இரையாகுவோம்.



No.76,5, 5th Lane Nawala.
0711950777, 0719999757
Janatharuhunu@gmail.com
ruhunu janatha alliance

අජන්ත ද සොයිසා
அஜந்தா டி சொய்சா
Ajantha De Zoysa
X


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இனியும் ஆட்டுமந்தைகளா?

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பாகக் களமிறக்கப்பட்டுள்ள பொதுவேட்பாளரின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கின்றது. தெற்கின் பிரதான வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகள் ஏற்கனவே வெளியாகியிருக்கும் நிலையில், தமிழ்ப் பொதுவேட்பாளரின் தேர்தல் அறிக்கை இறுதியாக வெளியிடப்பட்டிருக்கின்றது. தமிழர் தாயகப் பகுதியில் மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகளையும், அவற்றுக்கான தீர்வுகளையும் இந்தத் தேர்தல் அறிக்கை கொண்டிருப்பதுடன், அதுவே தமிழ் மக்களின் நிலைப்பாடு என்பதை உலகறியச் செய்ய பொதுவேட்பாளருக்கு மக்கள் வாக்களிக்கவேண்டும் என்றும் அதில் வேண்டுகோள் விடுக்கப் பட்டிருக்கின்றது.

தெற்கின் பிரதான வேட்பாளர்கள் -பெரும்பான்மையின அரசியல் தலைவர்கள் தங்கள் தேர்தல் அறிக்கைகளைக் கடந்தவாரம் வெளியிட்டிருந்தனர். தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க, ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, சுயேச்சையாகக் களமிறங்கியுள்ள தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தேர்தல் அறிக்கைகள் பல சலுகைகள், எதிர்காலத் திட்டங்களைக் கொண்டிருக்கின்றபோதும், தமிழர் விடயத்தில் அவர்கள் அனைவரும் அடக்கியே வாசித்திருக்கின்றனர். தமிழ் மக்களின் கோரிக்கைகளைக் கவனத்தில் எடுத்தால் - பெரும்பான்மையின மக்களின் வாக்குகள் பறிபோகலாம் என்ற அச்சம் அதற்குக் காரணமாக இருக்கலாம். தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வு தொடர்பாகவோ, தமிழர் தாயகப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட பௌத்தமயமாக்கல், அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள், தமிழ் மக்களின் இனப்பரம்பலைத் திட்டமிட்டுச் சிதைக்கும் நகர்வுகள் என்பவற்றைப் பற்றியோ தெற்கின் ஜனாதிபதி வேட்பாளர்கள் தங்கள் தேர்தல் அறிக்கையில் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. நாட்டின் எதிர்காலம் என அவர்கள் மேடைகளில் முழங்கினாலும், நடைமுறையில் பெரும்பான்மை மக்களின் வாக்குகளைக் கவருவதிலேயே அவர்கள் முனைப்பாக இருக்கின்றனர்.

கடந்தகாலங்களில் நடந்த தேர்தல்களில் தெற்கின் அரசியல் தலைவர்களால் தமிழ்த் தரப்புகளுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள், தேர்தலின் பின்னர் காற்றில் பறக்கவிடப்பட்டன. அவ்வாறான அனுபவங்கள் தமிழ்த் தரப்பு களுக்கு ஒன்றல்ல, இரண்டல்ல, ஏராளம் இருக்கின்றது. இந்த அனுபவங்கள் தமிழ் மக்கள் மனங்களில் ஆறாத வடுவை ஏற்படுத்தியிருக்கின்றன. பெரும்பான்மையின மக்களின் வாக்குகள் கிடைக்காது போய்விடும் என்பதற் காக தமிழ் மக்களின் பிரச்சினைகளை கணக்கில் எடுக் காதிருக்கும் தெற்கு அரசியல் தலைமைகள் தமிழ் மக்களுக்கான தீர்வைத் தருவார்களா என்பது கேள்விக் குறியே. அந்த அனுபவங்களே தமிழ் மக்களுக்கான பொது வேட்பாளர் என்ற எண்ணக்கருவை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது. ஆனால் இந்த விடயத்தில் தமிழ்க் கட்சிகள் வெவ்வேறு பக்கங்களில் பயணிக்கின் றன. ஒரு தரப்பு பொது வேட்பாளருக்காகவும், இன் னொரு தரப்பு சஜித் பிரேமதாஸவுக்காகவும், மூன்றாம் தரப்பு ரணில் விக்கிரமசிங்கவுக்காகவும் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன. கடந்த காலங்களில் இவ்வாறான தனித்திசைப் பயணங்களை முன்னெடுத்ததில்லை. தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவான தரப்புகள் ஒருபக்கமாகவும், தமிழ்த் தேசியத்துக்கு எதிர் நிலைப்பாடுடைய கட்சிகள் இன்னொரு தரப்பாகவுமே கடந்தகால ஜனாதிபதித் தேர்தல்களில் தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தன. ஆனால் இப்போது கட்சிகள் தங்கள் சொந்த நலன்களுக்காக சிதறுண்டு வெவ்வேறு பாதைகளில் செல்வது எமது இனத்துக்கு ஆரோக்கியமானதல்ல. இனிமேலும் அரசியல் கட்சிகள் காட்டும் திசையில் செல்லும் ஆட்டுமந்தைகளாக இருக்காமல், தமிழ் மக்கள் சிந்தித்துச் செயற்படவேண்டிய தருணத்தை இந்த ஜனாதிபதித் தேர்தல் உண்டாக்கியிருக்கின்றது. சந்தர்ப்பத்தை தமிழ் மக்கள் சரிவரப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது காலத்தின் தேவை .




வேட்பாளர்கள்

## பட்ஜெட்டை மீறினால் 3 ஆண்டுகள் தண்டிப்பு!

கொழும்பு, செப். 4



நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொகையைவிட கூடுதலான தொகையை பிரசாரத்துக்கு செலவிட்டால் 3 வருடங்களுக்கு அவர்களது சிவில் உரிமைகள் பறிக்கப்படும் எனத் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிந்து 21 தினங்களுக்குள் வேட்பாளர்கள் தமது வரவு - செலவு விவரங்களை தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கவேண்டும். இந்த விவரங்கள் ஊடகங்களிலும் இணையத் தளங்களிலும் வெளியிடப்படும். இதில் ஏதாவது மோசடிகள் இடம்பெற்றிருப்பின் பொதுமக்கள் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

## கையூட்டுப் பெற்றனரென அலுவலர்கள் கைது

கிளிநொச்சி, செப்.4

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபை அலுவலர்கள் இருவர் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் நேற்று செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர். குறித்த அலுவலர்கள் இருவரும் இலஞ்சம் வாங்குவதாக கிடைத்த தகவலுக்கு அமைய கிளிநொச்சிக்கு வருகைதந்த இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினர் அவர்களைக் கைது செய்துள்ளனர். அவர்கள் மேலதிக விசாரணைக்காக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-214)

## 2025 ஆம் ஆண்டில் 25 அரச விடுமுறைகள்

கொழும்பு, செப்.4

2025 ஆம் ஆண்டுக்கான அரச மற்றும் வங்கி விடுமுறை நாள்களைக் குறிப்பிட்டு விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. 2025ஆம் ஆண்டில் மொத்தம் 25 விடுமுறை நாள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.
பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரான பிரதமர் தினேஷ் குணவர்த்தனவால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (ச)

## சுற்றுலாவிகள் வருகையில் வீழ்ச்சி

கொழும்பு, செப்.4

வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை கடந்த ஓகஸ்ட் மாதத்தில் எட்டமுடியாது போயுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. கடந்த ஓகஸ்ட் மாதத்தில் 2 இலட்சத்து 2,907 வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் நாட்டை வந்தடைவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. கடந்த மாத இறுதியில் குறித்த எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதற்கமைய, ஒரு இலட்சத்து 64 ஆயிரத்து 609 சுற்றுலாப் பயணிகளே கடந்த ஓகஸ்ட் மாதத்தில் நாட்டை வந்தடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச)

ஜனாதிபதித் தேர்தலின் பின்

## மாகாணசபைத் தேர்தல் சட்டவரைவு பரிசீலிப்பு

கொழும்பு, செப்.4

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னர், ஒக்ரோபர் 8 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும். அப்போது மாகாணசபைத் தேர்தல் திருத்தச்சட்டவரைவை நிறைவேற்றிக் கொள்வது தொடர்பில் பரிசீலிக்கலாம் என்று சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.
தனிநபர் பிரேரணையையே சுமந்திரன் கொண்டுவந்தார். இதற்கு நாமும் ஆதரவு தெரிவிக்கின்றோம்.
இது ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் காலப்பகுதி. எனவே, தேர்தல் முடிந்த பிறகு இது பற்றிப் பரிசீலிக்கலாம். இந்தச் சட்டதிருத்தம் இன்று நிறைவேற்றப்பட்டால் நாளை மாகாணசபைத் தேர்தல் நடக்கப்போவதும் இல்லை அல்லவா?- என்றார். (ச-44)

**நாளை**

05.09.2024

வியாழக்கிழமை - ஆவணி - 20

சுபநேரம் : 07.35 - 09.05

ராகுகாலம் : 01.35 - 03.05

**நாளொரு நல்வார்த்தை**

சீர்தூக்கிப் பார்க்கும் ஆற்றல் நமக்கு இல்லாவிட்டால், அதனால் விளையும் தீங்கை நாம் அனுபவித்துத்தான் ஆகவேண்டும்!

- இரவீந்திரநாத் தாகூர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய அரபு இராச்சியத்தில் பொதுமன்னிப்பு காலக்கெடு

சுற்றுலா விசா அல்லது வதிவுரிமை விசா முடிந்த பின்னரும் சட்டவிரோதமாக ஐக்கிய அரபு இராச்சியத்தில் தங்கியிருப்போர் ஒக்ரோபர் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது விசாவை புதுப்பித்துக் கொள்ளுமாறு ஐக்கிய அரபு இராச்சியம் அறிவித்துள்ளது. சட்டவிரோதமாக நாட்டினுள் நுழைந்தவர்களைத் தவிர, ஏனையோர் விசாவைப் புதுப்பித்துக் கொள்ளமுடியும்.

இதற்காக தண்டப்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது. ஒக்ரோபர் 31 ஆம் திகதிக்குப் பின்னர் விசா இல்லாமல் தங்கியிருப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் ஐக்கிய அரபு இராச்சியம் அறிவித்துள்ளது. (ச-25-6)

# மறைந்த ஊடகவியலாளர் பிரகாஷுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், செப்.4



கொரோனா தொற்றுக்குள்ளாகி மறைந்த இளம் ஊடகவியலாளரான ஞானப்பிரகாசம் பிரகாஷின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இதன் போது , மறைந்த ஊடகவியலாளரின் உருவப்படத்துக்கு யாழ். ஊடக அமையத்தின் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான கு.செல்வக்குமார் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் யாழ் தினக்குரல் பத்திரிகை ஆசிரியர் த.வினோஜித் ஈகைச்சுடரை ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

கொடிகாமத்தைச் சேர்ந்த பிரகாஸ் சுயாதீன ஊடகவியலாளராக யாழில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளுக்கும், உள்நாட்டு, வெளிநாட்டு இணையத்தளங்களுக்கும் கட்டுரைகள், செய்திகளை எழுதி வந்துள்ளார். அதேவேளை சில இணையத்தளங்களில் செய்தி பதிவேற்றுனராகவும் கடமையாற்றி வந்தார். இந்நிலையில் அவர் கடந்த 2021 செப்ரெம்பர் 2 ஆம் திகதி கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-25, 20-27)





வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் குரோதி வருட மஹோற்சவப் பெருந் திருவிழாவின் 26ஆம் நாளான பூங்காவனத் திருவிழா நேற்றுச் செவ்வாய்க்கிழமை மாலை சிறப்பாக நடைபெற்றது. (ம-66)




பெருமைமிக்க ஓர் அரச சேவைக்காக

நாட்டுக்காக அளப்பரிய சேவையாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு பின்வரும் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு நான் நடவடிக்கை மேற்கொள்வேன்.

- அடிப்படை சம்பளத்தில் குறைந்தபட்சம் 24% அதிகரிப்பு
- வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை ரூ.25,000 வரை உயர்த்துதல்
- குறைந்தபட்ச சம்பளத்தை ரூ.57,500 ஆக உயர்த்துதல்
- நிரந்தர வதிவிடத்திற்கு அமைவாக பணியிடத்தை வழங்குதல்
- தொழில்சார் கண்ணியத்தை ஏற்டுத்தும் திட்டம்
- அந்தந்த தொழிலின் தனித்துவத்தை பாதுகாக்கும் வகையிலான சம்பளத் திட்டம்
- வருடாந்தம் சம்பள படிமுறைகளை உயர்த்துதல்
- வெளிப்படைத் தன்மையுடன் கூடிய பதவி உயர்வுகள் மற்றும் மதிப்பீடுகள்
- குறைந்த வட்டியில் வீடுகள் அல்லது வீடமைப்புக் கடன்கள்
- வெளிமாவட்டத்தில் பணிபுரிபவர்களுக்கு ஊக்கத்தொகை
- சம்பளத்தின் பத்து மடங்கை ஐந்து நாட்களில் கடனாகக் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு அவசர கடன் திட்டம்
- அக்ரஹார காப்புறுதித் தொகையை ஆண்டுதோறும் அதிகரித்தல்
- பிள்ளைகளின் உயர் கல்விக்கான உதவித் தொகை வழங்கும் திட்டம் மற்றும் சலுகைக் கடன் திட்டம்
- அரசியல் செல்வாக்கு இல்லாமல் சுதந்திரமாக தனது கடமைகளைச் செய்யக்கூடிய ஒரு கண்ணியமான அரச சேவை

இது நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கியமான தேர்தலாகும். நாட்டை கட்டியெழுப்பக்கூடிய மதிப்பிற்குரிய மற்றும் வினைத்திறன்மிக்க அரச சேவைக்காக என்னுடன் கைகோர்த்துக் கொள்ளுங்கள்.

சஜித் பிரேமதாச
ஐக்கிய மக்கள் கூட்டணி

සජිත් ප්‍රේමදාස
சஜித் பிரேமதாச
Sajith Premadasa
X

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சியில்

# 1,00907 பேர் வாக்களிக்கத் தகுதி 108 வாக்களிப்பு நிலையங்கள்!

வவுனியா, செப்.4



இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு லட்சத்து 907 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர். 108 வாக்களிப்பு நிலையங்கள் தயார்படுத்தப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி பதில் மாவட்டச் செயலர் எஸ்.முரளீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இன்று நடைபெறவுள்ள தபால் மூல வாக்களிப்புக்கு 3 ஆயிரத்து 656பேர் தகுதிபெற்றுள்ளனர். அவர்கள் வாக்களிப்பதற்காக 96 நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை தேர்தல் விதிமீறல் முறைப்பாடுகள் மூன்று கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-113)



## சஜித் பரப்புரையில் கண்காணிப்பு

யாழ்ப்பாணம், செப்.4

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் பரப்புரைக்கூட்டம் வவுனியா வைரவப்புளியங்குளத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டபோது அங்கு ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். தேர்தல் பிரசாரச் செயற்பாடுகள் மற்றும் கலந்து கொண்ட மக்களுடைய செயற்பாடுகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தியிருந்தார்கள். அத்துடன் கூட்டத்தில் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் தொடர்பிலும் குறிப்புகளை எடுத்துக் கொண்டனர். (ச-25-18)

## இறக்குமதி வாகனங்களை ஒக்ரோபருக்குள் பதிவுசெய்க

கொழும்பு, செப்.4

உதிரிப்பாகங்களாக இறக்குமதி செய்யப்பட்ட 41 வாகனங்களையும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் நாயகத்துக்கு உத்தரவிட்டுள்ளது. 41 வாகனங்கள் உதிரிப்பாகங்களாக இறக்குமதி செய்யப்பட்டு பொருத்தப்பட்டு அவற்றுக்குரிய வாகனப் பதிவுகளை மேற்கொண்ட போது மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் மறுப்புத் தெரிவித்தது. இறக்குமதியாளர்கள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் முடிவுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்காளிகளுக்கு வழக்குச்செலவாக தலா பத்தாயிரம் ரூபா வழங்குமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-45-6)

## குழந்தை பிறப்பு வீதம் கணிசமானளவு வீழ்ச்சி

கொழும்பு, செப்.4

இலங்கையில் குழந்தை பிறப்பு வீதம் கடந்த ஐந்து வருடங்களாக கணிசமான அளவில் குறைவடைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. 2019ஆம் ஆண்டில் பதிவான குழந்தை பிறப்பு எண்ணிக்கையைவிட 2023 ஆம் ஆண்டில் பதிவான குழந்தை பிறப்பு எண்ணிக்கை 70,000ஆல் குறைவடைந்துள்ளதாக மக்கள்தொகை கணக்கெடுப்புப் பிரிவின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. எதிர்வரும் சில வருடங்களுக்குள் பாடசாலைகளுக்குள் பிள்ளைகளை உள்வாங்கும் நிலை குறைவடைந்து, குறைவான பிள்ளைகள் உள்ள பாடசாலைகளை மூடும் நிலை ஏற்படலாம் எனகல்வித்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (ச-இ)

## ஊட்டச்சத்தின்றி கர்ப்பிணிகள்

கொழும்பு, செப்.4

கர்ப்பிணித் தாய்மார்களிடையே இரும்புச் சத்துக் குறைபாடு மற்றும் நுண்ணூட்டச் சத்துக் குறைபாடு காரணமாக கர்ப்பிணிப் பெண்களின் கருச்சிதைவு அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. குடும்ப சுகாதாரப் பணியகத்தின் சமீபத்திய தரவு அறிக்கைகளில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது நாட்டில் பிறக்கும் குழந்தைகளின் எடை குறைவாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளதுடன், கிராமமட்டத்தில் இந்த நிலைமை அதிகளவில் காணப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## இலங்கைக்குள் ஊடுருவும் உயிர்கொல்லி போதைகள்

### தூத்துக்குடியில் பறிமுதல்

கொழும்பு.செப். 4

தூத்துக்குடி திரேஸ்புரம் கடற்கரைப் பகுதியிலிருந்து இலங்கைக்கு படகு மூலம் கடத்தப்படவிருந்த 58 கிலோ சாரஸ் என்ற அதிபோதைப் பொருளை கியூ பிரிவு பொலிஸார் நேற்றுமுன்தினம் பறிமுதல் செய்துள்ளனர் .

இதன் சர்வதேச மதிப்பு 29 கோடி இருக்கும் எனக் கூறப்படுகிறது.

தூத்துக்குடி கடற்கரைப் பகுதியிலிருந்து இலங்கைக்கு தொடர்ச்சியாக கஞ்சா, பீடி இலைகள், களைக்கொல்லி மருந்து, வலி நிவாரண மாத்திரைகள் தொடர்ச்சியாக கடத்தப்பட்டு வரும் நிலையில் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையில் இந்தச் செயல் முறியடிக்கப்பட்டது.



சம்பவம் தொடர்பில் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடம் முதற்கட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-100-56)




போன ஞாயிற்றுக்கிழமை வீட்டுக்கட்சியின்ர மத்திய குழுக்கூட்டத்துக்கு வரேக்கேயே, ரெலிபோனுக்குத்தான் சப்போர்ட் பண்ணவேணும் எண்ட முடிவை நாலு பக்கத்தில எழுதி, அதை பிரிண்டும் எடுத்துக் கொண்டு தான் சுமந்திரன் வந்தவர். அப்ப கூட்டம் நடக்க முதலேயே என்ன முடிவை எடுக்கிறதெண்டு வேற எங்கேயோ டிசைட் பண்ணிட்டினம் போல. அப்பிடி பிரிண்ட் எடுத்துக் கொண்டந்தவர் கூட்டம் தொடங்கேக்கையே எல்லா மத்திய குழு மெம்பர்மாருக்கும் அதைக் குடுத்திட்டுத்தான், அதைப் பற்றிப் பேசத் தொடங்கினவர். ஆனால், கூட்டத்துக்குத் தலைமை தாங்கின சிரேஸ்ட உப தலைவர் 'உந்தத் தீர்மானத்தை நீங்கள் கொண்டந் தால் வேற மாதிரி கதையள் வரும்., இன்னொரு ஆள் உந்தத் தீர்மானத்தைக் கொண்டாறதுதான் நல்லது' எண்டு அட்வைஸ் சொல்லியிருக்கிறார். அதுக்குப் பிறகும் இந்த முடிவுக்கு எதிராக் கொஞ்சப் பேர் குரல் குடுத்திருக்கினம். எண்டாலும் அவையை அடிச்சு அமத்திப்போட்டு, 'இதுதான் முடிவு' எண்டு எந்த குரூப் இப்பிடி ரெலிபோனுக்கு சப்போர்ட் பண்ணுறது எண்ட தீர்மானத்தைக் கொண்டந்ததோ அந்தக் குரூப்பில இருக்கிறவையே ஒராள் முன்மொழிய , இன்னொரு ஆள் வழிமொழிஞ்சு 'இது தான் வீட்டுக்கட்சியின்ர ஏகமனதான முடிவு' எண்டும் அறிவிச்சுப் போட்டினம்.

இந்த முடிவைப் பற்றி கட்சியின்ர தலைவருக்கு மூச்சும் விடேலை. பிறகு மீடியாக்களில பாத்துத் தான் அவருக்கே தெரிஞ்சதால, ஆள் முதலில வழக்கம் போல 'எனக்குத்தெரியாமல் எடுத்த முடிவை கட்சியின்ர முடிவு எண்டு ஏற்கேலாது' எண்டு கெம்பியடிச்சவர். ஆனால் அடுத்தநாளே அப்பிடியே பிளேட்டை மாத்தி 'கட்சி எடுத்த தீர்மானத்தை நிறைவேற்ற என்னென்ன நடவடிக்கை எடுக்கோணும் எண்டு ஆலோசிக்கப்போறம்' எண்டு சொன்னதிலேயே உள்ளால ஏதோ ஒரு விசயம் நடந்திருக்குது எண்டு சனத்துக்கு வடிவா விளங்கிட்டுது. ஒரு கட்சித்தலைவர் எண்டால், கட்சிக்காரரை தன்ர சொல்லுக்குக் கட்டுப்பட வைச்சிருக்கோணும். சம்பந்தர் கட்சித் தலைவரா இருக்கேக்க, முக்கியமான முடிவுகளை அவர் தானே எடுத்திட்டு அதை அறிவிப்பார். கட்சியில இருக்கிற ஒரு பிள்ளை கூட எதிர்த்து மூச்சுவிடாது. அதுதான் ஒரு தலைவருக்கு இருக்கவேண்டிய கெத்து. இப்பிடி எல்லாத்துக்கும் சம்பந்தர் மத்தியகுழுவைக் கூட்டி முடிவெடுக்காததுக்கு காரணமே, பல எலியள் சேர்ந்தா புத்தெடுக்க முடியாது எண்டது அவருக்குத் தெரிஞ்சிருந்தது. எடுப்பார் கைப்பிள்ளையா மாறமுதல், சம்பந்தர் தனிச்சு எடுத்த முடிவுகள் எல்லாமே சரியாத்தான் இருந்தது. பிறகு சேர்க்கை பிழைச்சதால அவரின்ர முடிவுகளும் பிழைக்கத் தொடங்கிட்டுது.

இப்ப மத்திய குழு எடுத்த முடிவை முதல்நாள் எதிர்த்துப்போட்டு, அடுத்தநாளே 'அந்த முடிவை நிறைவேற்றப் பாடுபடுவேன்' எண்டு சபதம் எடுக்கிறதெல்லாம், வீட்டுக்கட்சியில சனத்துக்கு இருக்கிற வெறுப்பை இன்னும் கூட்டுமே தவிர குறைக்காது. முதல்ல தங்கட கட்சிப் பிரச்சினையைத் தீர்க்க வழியைப் பாக்காமல், இப்பிடி தேவையே இல்லாத ஆணியளைப் பிடுங்கி தங்களுக்குத் தாங்களே ஆப்பு வைக்கிறது வீட்டுக்கட்சிக்காரருக்கு பொழுதுபோக்கா மாறிட்டுக் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு யோசனையின்
மதிப்பு அதை
பயன்படுத்துவதிலேயே
இருக்கின்றது.

- தோமஸ்
அல்வா எடிசன்

புதன்
பொய்கை

04.09.2024
புதன்கிழமை

■ சி.கதீசனா
*ஊடகக் கற்கைகள்*
*யாழ்.பல்கலைக்கழகம்*

# தேர்தலும் தெரிவுகளும்



ஒரு ஜனநாயக நாட்டுக்குத் தேர்தல் என்பது மிகமிக அவசியமாகின்றது. நாடாளுமன்றம், சட்டமன்றம், நகராட்சி மன்றம், ஊராட்சி மன்றம் ஆகியவற்றுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பல்வேறு தேர்தல்கள் நடைபெறுகின்றன. தேர்தல்களில் நாட்டின் குடிமக்கள் தங்கள் வாக்குகளை வழங்கிப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

இவ்வாறு வாக்களிப்பதற்குக் குடிமக்களுக்கு உள்ள உரிமையை வாக்குரிமை என்கிறோம். இலங்கையில் 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கச் சட்டத்தின்படி இலங்கையின் ஜனாதிபதி வரையறுக்கப்பட்ட தரவரிசை வாக்களிப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஜனாதிபதிக்கு வாக்காளர்கள் மூன்று விருப்பங்களை தெரிவிக்கலாம். எந்த வேட்பாளரும் முதல் எண்ணிக்கையில் 50 வீதமான (செல்லுபடியாகும்) வாக்குகளை பெறவில்லை என்றால், அதிக வாக்குகளை பெற்ற இரண்டு வேட்பாளர்களைத் தவிர அனைத்து வேட்பாளர்களும் நீக்கப்படுவார்கள். நீக்கப்பட்ட வேட்பாளர்களின் இரண்டாவது மற்றும் மூன்றாவது விருப்பத்தேர்வுகள் மீதமுள்ள இரண்டு வேட்பாளர்களில் ஒருவர் முழுமையான பெரும்பான்மையினை பெறும்வரை விநியோகிக்கப்படும்.

2024ஆம் ஆண்டு இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் செப்ரெம்பர் 21ஆம் திகதி காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

இலங்கையில் ஒன்பதாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் 2024ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் திகதி நிறைவடைந்ததையடுத்து இம்முறை தேர்தலில் 39 வேட்பாளர்கள் போட்டியிட உள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இவர்கள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வருகை தந்து தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர்.

ரணில் விக்கிரமசிங்க 19 ஆண்டுகளுக்கு பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றார். இது மூன்றாவது தடவையாக அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சந்தர்ப்பமாகும். சுயாதீன வேட்பாளராக களமிறங்கியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் ரணில் தேர்தல் ஆணைக்குழுவினால் எரிவாயு சிலிண்டர் சின்னம் வழங்கப்பட்டுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியாக விளங்கும் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் சஜித் பிரேமதாஸ இரண்டாவது முறையாக போட்டியிடுகின்றார். சஜித் பிரேமதாஸ தொலைபேசி சின்னத்தில் போட்டியிடுகின்றார். மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி சார்பில் இரண்டாவது தடவையாகவும் அநுர குமார திஸாநாயக்க களமிறக்கப்பட்டுள்ளார். இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக பதவி வகித்த மஹிந்த ராஜபக்சவின் மூத்த மகன் நாமல் ராஜபக்ச இம்முறை தேர்தலில் முதல் தடவையாக பொதுஜன பெரமுனவில் மொட்டுச் சின்னத்தில் போட்டியிடுகின்றார்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் காலப்பகுதியில் இராணுவத் தளபதியாக பதவி வகித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இரண்டாவது முறையாகப் போட்டியிடுவதோடு சுயாதீன வேட்பாளராகப் போட்டியிடுகின்றார். முன்னாள் அமைச்சராகக் கடமையாற்றிய விஜயதாஸ ராஜபக்ச அமைச்சுப் பதவியைத் துறந்த நிலையில் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் முதல் தடவையாக போட்டியிடுகின்றார்.

மேலே குறிப்பிட்டோரைத் தவிர 33 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர். அவர்களின் பெயர்களும் சின்னங்களும் பின்வருமாறு

| | |
|---|---|
| சிறிபால அமரசிங்க | டயர் |
| சமிந்த அனுருத்த | குதிரைவாலி |
| ப.அரியநேந்திரன் | சங்கு |
| டி.எம்.பண்டாரநாயக்க | மேசைமின்விசிறி |
| பி.டபிள்யூ.எஸ்.கே.பண்டாரநாயக்க | தேங்காய் |
| நுவான் போபகே | குடை |
| அக்மீமன தயாறாதன தேரர் | கரும்பலகை |
| மஹிந்த தேவகே | பலூன் |
| ஓஷல ஹேரத் | வரை |
| முகமது இலியாஸ் | சிரிஞ்ச் |
| அபுபக்கர் முகமது இன்பாஸ் | இரு இலைகள் |
| சிட்னி ஜெயரத்ன | பலாப்பழம் |
| சிறிதுங்க ஜயசூரிய | ட்ரைஷா |
| திலித் ஜயவீர | நட்சத்திரம் |
| சரத் கீர்த்திரத்ன | கால்பந்து |
| கே.ஆர்.கிஷன் | தண்ணீர்க் குழாய் |
| ஆனந்த குலரத்ன | பதக்கம் |
| ஏ.எஸ்.பி. லியனகே | கங்காரு |
| சரத் மனமேந்திரா வில் | அம்பு |
| விக்டர் அந்தோணி பெரேரா | மோட்டார் பைக் |
| கே.கே.பியதாச | கல்குலேட்டர் |
| எம்.எம்.பிரேமசிறி | ஜோடி கண்ணாடி |
| நாமல் ராஜபக்ஷ | மொட்டு |
| ரொஷான் ரணசிங்க | கிரிக்கெட் மட்டை |
| ஜனக ரத்நாயக்க | கோப்பை |
| பத்தரமுல்லே சீலரதன தேரர் | டிராக்டர் |
| லலித் டி சில்வா | வாழைப்பழ சீப்பு |
| சுரஞ்சீவ அனோஜ் டி சில்வா | கழுகு |
| எம்.திலகராஜா | பறவை இறகு |
| கீர்த்தி விக்கிரமரத்ன | கொடி |
| பிரியந்த விக்கிரமசிங்க | அட்டவணை |
| பாணி விஜேசிறிவர்தன | கத்தரிக்கோல் |
| [illegible] | [illegible] |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வரலாற்றில் அதிகளவு வேட்பாளர்கள் போட்டியிடும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும். கடந்த ஆண்டு 35 வேட்பாளர்கள் போட்டியிட்ட நிலையில், இவ்வாண்டு 39 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். எனினும் அவர்களில் எவரும் பெண்களில்லை என்ற விடயம் வருத்தத்திற்குரியதாகும்.

### மக்கள் கருத்தில்கொள்ள வேண்டிய விடயங்கள்

இலங்கையில் 18 வயது பூர்த்தியடைந்தவுடன் இளைஞர்களுக்கு வாக்குரிமையை வழங்கும் பொருட்டு வாக்காளர்களைப் பதிவு செய்யும் சட்ட மூலத்தை நாடாளுமன்றில் முன் வைத்துள்ளதாகச் சபை முதல்வரான அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்த அடிப்படையில் தேர்தல் காலப் பகுதிகளில் நம் நாட்டிற்குரிய ஜனாதிபதியை நாம் ஒவ்வொருவரும் முடிவு செய்து தேர்ந்தெடுக்கவேண்டும். வாக்களிக்க விருப்பம் இல்லாமலோ அல்லது நண்பர்கள் உறவினர்களின் விருப்பத்திற்கு ஏற்பவோ நாம் வாக்களிக்கும் சந்தர்ப்பத்தில் நமது வாக்குரிமை வீணடிக்கப்படுகிறது.

நாம் வழங்கும் ஒவ்வொரு வாக்குகளும் பெறுமதியானவை என்பதனை உணர்ந்து கொள்ளவேண்டும். ஒவ்வொரு வாக்குகளும் முடிவை மாற்றி அமைக்க வலுவுள்ளன. வாக்களிக்கச் செல்லாமல் இருப்பதினாலோ தவறான விதத்தில் வாக்களிப்பதினாலோ எந்தப் பயனும் இல்லை. ஒவ்வொரு வீட்டிலும் உள்ள வாக்குரிமை பற்றிய தெளிவான விளக்கம் உடையோர் இதன் முக்கியத்துவத்தினை அவசியத்தினையும் ஏனையோருக்கு வழங்கவேண்டும்.

ஆனால் அவர்களது தனிப்பட்ட விருப்புகளில் மாற்றம் செய்ய இயலாது. வாக்களிப்பது பற்றி விவரம் தெளிவில்லாதோர் உறவினரிடமோ அல்லது அயலாரிடமோ பத்திரிகைகள் மூலமோ அதனைப் பற்றி அறிந்து கொள்ளவேண்டும். வாக்களிக்கத் தகுதியுடைய ஒருவனே அந்த நாட்டின் குடியுரிமையைப் பெறத் தகுதி உடையவனாகின்றான். ■





# பாடசாலைகளில் பாலியல் கல்வி!

**தாஸிம் றிஜினா,**
*இரண்டாம் வருட சிறப்புக்கற்கை மாணவி,*
*கல்வி, பிள்ளை நலத்துறை*
*கிழக்குப்பல்கலைக்கழகம்*

நவீன உலகில் பல்வேறுபட்ட விடயங்கள், பிரச்சினைகள் மற்றும் கருத்து வேறுபாடுகள் நிலவும் அதேவேளை, பாலியல் சார்ந்தும் பல முரணான சிந்தனைகளும் நிலவவே செய்கின்றன. பாலியல் சிந்தனை தொடர்பில், பல்வேறு தலைவர்கள் பல்வேறுபட்ட சிந்தனைகளை விதைத்துச்



சென்றிருக்கின்றனர். அந்த வகையில், பிரான்ஸ் தத்துவமேதையும் எழுத்தாளருமாகிய மிஷேல் புக்கோவின் பாலியல் தொடர்பான கண்ணோட்டத்தில் பாலியல் பற்றிய அவரது கருத்துகள் பாரம்பரிய கதைகளுக்கும், பாலியல் தொடர்பான பாரம்பரிய மரபுகளுக்கும் சவால் விடுகின்றன. பாலியல் அடையாளங்களை உருவாக்குவதில் சக்தி, அறிவு, சமூக விதிமுறைகள் மற்றும் உள்ளீடுகள் எந்த வகையில் தாக்கம் செலுத்துகின்றன என்பதை புக்கோ 'வைத்தியமும் நாகரீகமும்' பாலியல் வரலாற்றின் ஈடுபாடு, 'த கிஸ்ரி ஒப் செக்ஸ்சுவாலிட்டி' ஆகிய நூல்கள் மூலம் ஆணித்தரமாக வெளிப்படுத்தியுள்ளார். பாலியல் பற்றிய தெளிவும் புரிதலும் சாதாரண மக்களுக்கு இருக்கவேண்டும் என்பதே புக்கோவின் பேரவா. ஆனால், அந்தப் புரிதல் இன்னும் பலருக்கு ஏற்படவில்லை என்பது வருந்தத்தக்க விடயம்.

இன்று பரவலாக மூன்றாம் பாலினத்தவர்களை ஏற்றுக் கொள்ளாத நிலையே உள்ளது. இதனால் இவர்கள் பாகுபாடு, இழிவுபடுத்தல் மற்றும் வன்முறையை எதிர்கொள்ளல் போன்ற பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றனர். இவர்களுக்கு பல நாடுகளில் சட்டபூர்வமான அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்பதும் இவர்கள் எதிர்நோக்கும் மிகப்பெரிய சவாலாகும். கல்வியில் கூட இவர்களுக்கு ஆதரவாக எவ்வித ஏற்பாடுகளும் இல்லை. பெரும்பாலான பாடசாலைகள் இன்றும் மூன்றாம் பாலினத்தவர்களை ஏற்றுக் கொள்ளும் வகையில் தயாராக இல்லை. இவர்கள் ஆசிரியர்களாலும், சக பாடிகளாலும் உடல் ரீதியாக, மனரீதியான துன்புறுத்தல்களை எதிர்நோக்குகின்றனர். பாடசாலைகள் மூன்றாம் பாலினத்தவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யத் தவறுகின்றன. கலைத்திட்டத்தில் பாலியல் கல்வியை உள் நுழைக்கும்போது பாலின பன்முகத் தன்மை பற்றிய கல்வியை அளிப்பதும் அவசியமாகும். இது அனைவருக்கும் விழிப்புணர்வை உண்டாக்குவதோடு குழந்தைகளிடமிருந்து பாகுபாட்டை நீக்குவதாலும் எதிர்கால சமூகம் பாலின பன்முகத்தன்மைக்கு அங்கீகாரத்தை வழங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. பாலியல் பற்றிய அறிவை பாடசாலைகளில் புகட்டாமல் வயது வந்த பிற்பாடு புரியவைத்தல் மிகவும் கடினமாகும். ஏனெனில் சிலர் தவறான புரிதல்களையும் முன்னுதாரணங்களையும் கொண்டு வளர்வதற்கும் வாய்ப்புள்ளது. அத்துடன், ஆண், பெண் பால் சமத்துவம் தொடர்பான கற்பித்தலை நாம் எங்களின் மாணவர்களுக்கு ஆழமாக வழங்கவேண்டும்.

2024ஆம் ஆண்டுக்கான கல்வி மறுசீரமைப்புத் திட்டத்தில் மாணவர்களின் பாடவிதானத்தில் பாலியல் கல்வியை இணைக்கவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க தெரிவித்துள்ளார். எனினும் பல வருடங்களாக இந்தக் கல்வித்திட்டம் மறுசீரமைக்கப் பெற்ற போதிலும் இன்னும் மாணவர்களிடையே அமுலாக்கப்படாமை என்பதுகூட ஒரு சவாலான விடயமாகவே காணப்படுகின்றது.

எமது நாட்டில் சிறுவர் துஷ்பிரயோகங்கள், மற்றும் சிறுவர்கள் மீதான வன்கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதற்குக் காரணம் சரியான வயதில் சரியான முறையில் பாலியல் கல்வி கிடைக்கப் பெறாததன் வெளிப்பாடாகும். எனவே, பாலியல் சம்பந்தமான கற்பித்தலை பாடசாலைமையப்படுத்தும்போதுதான் அதுசார் குற்றங்களையும் களையமுடியும் என்றால் அது மிகையல்ல. இன்றைய சூழலில் இது வெறும் விவாதம் அல்ல, மாறாக ஒரு அவசியமான தேவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் மற்றும் கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் 'புதுக்குடியிருப்பு பிரதேச பண்பாட்டுப் பெருவிழா' அண்மையில் இடம்பெற்றது.



# பெறுபேற்றை அதிகரிக்க சுயகற்றல் அவசியம்

**பைசல் பசீரா**
*2ஆம் வருட சிறப்பு கற்கை*
*கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை,*
*கிழக்கு பல்கலைக்கழகம்.*

ஆசிரியர்களின் வழிகாட்டலோடு மாணவர்கள் சுயமாக கற்பதே மாணவ மைய கற்றலாகும். உண்மையாகவே இம்முறையானது மாணவர்களை சுதந்திரமாகவும் தன்னிச்சையாகவும் தமது கல்விப் பொறுப்புகளை மேம்படுத்தப் பயன்படுகிறது. இவ்வுலகில் சகல பிள்ளைகளும் இயற்கையாகவே கற்றலுக்குரிய சக்தி உடையவர்களாகவே பிறக்கின்றனர். பிள்ளையின் மூளையானது தனது சூழலை மிக நுணுக்கமாக ஆராய்ந்து அதனை பயனுள்ளவாறு ஒன்று திரட்டக்கூடிய நிலையில் உள்ளது என கூறுகின்றார் நோபேட் பிஷர்.

மாணவ மைய கற்பித்தலானது ஒருவழிக் கற்பித்தல் முறையல்ல. இந்த அணுகுமுறையானது மாணவருக்கு ஆசிரியர் தகவலை வழங்குவதை காட்டிலும் மாணவர்களுக்கு தகுந்த கற்றல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. மாணவர்கள் தமது எண்ணங்களையும் நடத்தைகளையும் ஆழ்ந்து சிந்தித்து நெறிப்படுத்திக் கொள்ள உதவுவதே கற்றல் ஆகும். மாணவ மைய கற்றல் மூலம் மாணவர்கள் எதைக் கற்கின்றனர் என்பதை காட்டிலும் எதைக் கற்றுக் கொள்கின்றனர் என்பது முக்கியமானது.

மாணவர் மையக் கற்றலில் தொழில்நுட்பம் அடிப்படையானதாகவும், அத்தியாவசியமாகவும் திகழ்கிறது. இதனூடாக வீடுகளிலும், நூலகங்களிலும், சமூக மையங்களிலும் ஆசிரியர் இல்லாமலேயே கற்க முடிகிறது. தற்போது பல்வேறுபட்ட கற்றல் நிகழ்வுகள் வலைத்தளம் மூலம் இடம்பெறுகின்றன. சுதந்திரமாக சிந்தித்து செயற்படும் ஆற்றல் உருவாக்கப்படுகிறது. சுயமாக பிரச்சினைகளைத் தீர்க்கும் பண்பு கற்பித்தல் இலக்குகளுடன் சகல மாணவர்களை கற்கத் தூண்டும் செயற்பாடு போன்றவை மாணவ மையக் கற்றல் ஊடாக கிடைக்கக்கூடிய பயன்களாகும். அந்த அடிப்படையில் இலங்கையில் சிறந்த பெறுபேறுகளை மாணவர்கள் பெறுவதற்கு கலைத்திட்டத்தில் மாணவ மைய கல்வியானது கொண்டுவரப்பட்டுள்ளமை சிறப்பான அம்சமாகும்.



# நவீன யுகத்தின் விதியை அன்பால் வெற்றிகொள்வோம்

பத்மசேனன் சனோசன் (எம்.ஏ.)
*எழுத்தாளர்,*
*ஊக்குவிப்பு பயிற்சி பயிற்றுவிப்பாளர்,*
*சண்மூன் இன்ஸ்பிரேசன் நிறுவன இயக்குநர்.*

நாம் எத்தனை பரிமாண வளர்ச்சியடைந்திருந்தாலும், எவ்வளவு தொழில்நுட்பங்களில் முன்னேறி இருந்தாலும் அன்று தொட்டு இன்று வரை மாறாதது அன்பு என்பதை எவராலும் மறுக்கமுடியாது. எனினும், அன்பு தொடர்பாக நாம் ஒவ்வொருவரும் பல்வேறு கண்ணோட்டங்களை கொண்டிருக்கின்றோம். நம் ஒவ்வொருவருடைய அன்பு தூய்மையாகவும், உண்மையாகவும் இருக்கும் போது, எவருக்கும் தீமை செய்யாத போது, இறைவன் மற்றும் இயற்கைக்கு எதிராக அமையாது இருக்கும்போது அந்த அன்பு புனிதமானது, அர்த்தமானது. அதனை விட இந்த உலகிற்கு மிகவும் அவசியமானது. அதுதொடர்பாக மிகவும் தெளிவோடு நாம் பயணிக்கவேண்டும். போட்டிகள் நிறைந்த உலகில் நாம் ஒருவருக்கொருவர் அன்பைப்பகிர்ந்துகொள்ளத் தவறிவிடுகிறோம். ஒவ்வொரு மதங்களின் அடித்தளமே அன்பாகத்தான் காணப்படுகின்றது. ஒரு மலை உச்சியில் உற்பத்தியாகும் ஊற்று "அன்பு" என்றால் அதிலிருந்து பிரியும் கிளைகளே மதங்களாகும். இந்து சமயம் "அன்பே சிவம்" என்றும் பௌத்த சமயம் "பகைமை ஒருபோதும் பகையால் ஒழிவதில்லை. அன்பினால் தான் அது ஒழியும்" என்றும் கிறிஸ்தவ சமயம் "அன்பு கொள்ளாதவன் கடவுளை அறியாதவன் ஏனெனில் அன்பே கடவுள்" என்றும் இஸ்லாம் சமயம் "அறிவு இறைவனின் உறைவிடத்தை நாடுகின்றது ஆனால் அன்பு தான் இறைவனின் உறைவிடம்" என்றும் அன்பின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன.

நாம் இன்று உயிரோடு இருப்பதற்கு உலகம், இறைவன், பெற்றோர், உறவினர்கள் எம் மீது கொண்ட அன்பின் விளைவே காரணம். இல்லையேல் நாம் எப்போதோ அழிந்து போயிருப்போம். என்னிடம் உயிர் இருப்பதற்கு அடையாளமே அன்புதான். அன்பைப் புறந்தள்ளிவிட்டு எம்மால் எந்தச் சாதனையும் செய்து விட முடியாது. பிரபல கவிஞர் ரூமி "நீங்கள் அன்பு செலுத்தும் வழியே கடவுள் உங்களிடம் இருக்கப் போகும் வழி" என்று கூறுகிறார்.

உலகில் வெற்றி பெற்ற பல உயர்ந்த மனிதர்கள் உன்னைப் போல் பிறரையும் நேசி என்பதுக்கு அமைய, அன்பை அடித்தளமாகக் கொண்டமை அவர்களின் வெற்றிக்கு மூலாதாரமாக உள்ளது என்பதனை வலியுறுத்துகிறார்கள். "தி பவர்" என்ற புத்தகத்தின் ஆசிரியர் அன்பு தொடர்பாக நாம் அனைவரும் அழகாகப் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் கூறியுள்ளார். அவர் "எமது கனவு எவ்வளவு பெரிதாக இருந்தாலும் அன்பிற்கு முன்னே அது மிகச்சிறியதுதான். அன்பு மிகப்பெரியதாக இருந்தால் எந்த ஒரு கனவையும் இலகுவாக அடைந்து விடமுடியும்" எனக் குறிப்பிடுகின்றார்.

நாம் அனைவரும் அறிந்த இயேசுபிரான் உலகை அதிகம் அன்பு செய்தவர், தோமஸ் அல்வா எடிசன் கண்டுபிடிப்புகளையும், மகாத்மா காந்தி இந்தியாவையும், அப்துல் கலாம் விஞ்ஞானம் மற்றும் ஆராய்ச்சியில் அன்பு செலுத்தியதனாலும் உலகம் இவர்களை இப்போதும் ஞாபகத்தில் வைத்திருக்கிறது.

"அன்பில்லார் எல்லாம் தமக்குரியவர் அன்புடையோர்என்பும் உரியர் பிறருக்கு" என்ற பொய்யாமொழிப் புலவரின் குரலில் அன்பு இல்லாதவர் எல்லா பொருட்களையும் தமக்கே பயன்படுத்துவர் என்றும் அன்புடையவரோ தம் உடலையும் பிறருக்காகக் கொடுப்பார் எனவும் கூறுகிறார். ஒருவர் மகிழ்ச்சியுடனும், வெற்றியுடனும் வாழ வேண்டும் என்றால் முதலில் அன்பு வேண்டும். இன்றைய பரிணாம வளர்ச்சி அடைந்த உலகில் ஒருவன் வெற்றி பெற்றால் அதனை சக மனிதர்கள் சந்தேகத்துடனும், பொறாமையுடனும் பார்ப்பது நாம் அறிந்த கசப்பான உண்மை. எனவே ஒருவருடைய வெற்றி மக்களுடைய மனதில் சந்தோசம் ஏற்படுத்துகிறதா?, பொறாமை ஏற்படுத்துகிறதா? என்ற மனநிலைதான் அன்பின் அளவுகோல். எனவே உங்களைப் போல் பிறரையும் நேசித்து அன்பை மனிதர்கள் மத்தியில் விதைத்து எதிர்காலத்தில் அதன் பயனை பெறுவோம்.



தமிழ்ச்சங்க நிறைவேற்று உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் பொன்.சுகந்தனின் பொன்விழாவும் நூல் வெளியீடும் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.





## சிந்தனை அரங்கும் நூல் அறிமுகமும்!

'இலக்கிய மாலை 23' சிறுவர் இலக்கியச் சிந்தனை அரங்கு, முன்னோடிகள் இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் எங்கட புத்தகங்கள் இல்லத்தில் பேராசிரியை மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பத்மா இளங்கோவனின் 'சிறுவர் இலக்கிய நுட்பங்கள்', 'சிறுவர் தமிழ் அமுதம்', 'கொரோனாவின் தடங்களில்...' ஆகிய மூன்று நூல்களின் அறிமுகங்கள் இடம்பெற்றன.



## மானும் அவ்வேடனும்!

வழியில் ஒரு வேடன் நின்றிருந்தான் சகி...!
புத்தனை எனக்குப் போதித்தான். அன்பும், கொல்லாமையும் இரு கண்களென்றான். அவன் கைகளில் இருந்த அம்பின் கூர்முனையில் குருதியின் வாடை.
சற்றுத்தொலைவில் இறந்தும் இறவாமலும் குற்றுயிராய் மானொன்று வீழ்ந்து கிடந்தது. குருதியால் தோய்ந்திருந்த அதன் முலையில் பச்சிளம் குட்டிகள் பசியாற்ற முட்டிக்கொண்டிருந்தன.
வேறொன்றுமில்லை.. நினைவில் நீ வந்து சென்றாய்...!

- லயனல்

புதன்பொய்கைக்கு
நீங்களும் எழுதலாம்

- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைப்படைப்புகள்

அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மக்கள் சக்தியை தாக்கிய ரணில் அணி

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவருடைய அமைச்சர்கள் மற்றும் ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றைய தினம் வழமைக்கு மாறாக தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளரான அநுரகுமார மீது தாக்குதலைத் தொடுத்துள்ளனர்.**

தேசிய புலனாய்வுச் சேவை ஜனாதிபதி தேர்தல் தொடர்பான அறிக்கையை ஜனாதிபதியிடம் நேற்றுக் கையளித்துள்ளதாக செய்திகள் வெளியான தன் பின்னணியில் இவ்வாறு இடம்பெற்றுள்ளது.

வெல்மடுல்ல வாராந்த சந்தை வளாகத்தில் நேற்று நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவால் வெற்றிபெற முடியாது. அவருக்கு வழங்கும் வாக்கு அநுரகுமாரவுக்கு வழங்கும் வாக்குகளுக்கு சமனாகும் என்பதால் இது குறித்து அவதானமாக செயற்பட வேண்டும். சஜித்துக்கு வாக்களித்து அநுரவை பலப்படுத்தாதீர்கள்- என்றார்.

இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புற, அணிந்து கொள்ள ஆடை இல்லை என்று பஞ்சம் பாடும் ஜே.வி.பி.யினர் அரசியல் பரப்புரைக்கு பெருமளவில் செலவிடுவது வேடிக்கையானதாகும்- என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க, ஜனநாயக வழிக்கு வருவதாக அறிவித்த ஜே.வி.பி. 1988ஆம் ஆண்டு தேர்தலின் போது தேர்தலில் போட்டியிடுவது மரண தண்டனைக்குரிய குற்றம் என அறிவித்தது. தேர்தல் கடமை மேற்கொண்டால் அதற்கான தண்டனை மரணம் என மாவட்ட செயலாளர்கள் எச்சரிக்கப்பட்டதோடு வாக்களிப்போருக்கு மரணம் பரிசளிக்கப்படும் என பொதுமக்களுக்கும் அறிவிக்கப்பட்டது. தேர்தலின் பின்னர் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் விலக வேண்டும் என்றனர். அன்று ஜே.வி.பி. வன்முறைக்கு முகங்கொடுத்தவர் ரணில் விக்கிரமசிங்க. சட்டம் ஒழுங்கை பேண முக்கிய பங்காற்றினார் அவர். ஆயிரத்துக்கும் அதிகமான பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் இருந்து விலகிச் சென்றுள்ளனர். ஜே.வி.பி.க்கு எதிராக பல்கலைக்கழக தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்த மாணவர்களை துரத்தித் துரத்தி அடிக்கின்றனர். இன்றும் அந்த நிலைமை காணப்படுகிறது. ஜனநாயக நீரோட்டத்துக்கு வந்து விட்டதாக நல்லவர்கள் போல நடித்தாலும் இன்னும் பழைய போக்குடனே அவர்கள் உள்ளனர். கடந்த போராட்டத்தின் போது அரச உடைமைகளை உடைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்குத் தீவைத்து சொத்துகளை திருடியதாக பிடிபட்டவர்களில் அதிகமானவர்கள் அநுர குமாரவின் ஜே.வி.பி. கட்சியினர் தான். பணம் இல்லையென்று சிந்திக்காதீர்கள். விகாரைகளில் திருடுங்கள் என சொல்லிக்கொடுத்தது ரோஹன விஜேவீரதான். கொலை செய்யும் பழக்கம், திருடும் பழக்கம், கொள்ளையிடும் பழக்கம் இன்னும் ஜே.வி.பி.யிடம் இருந்து குறையவில்லை - என்றார்.

அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, சந்திரிகா ஆட்சியில் ஜே.வி.பி.யின் 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர். சகல மாவட்டங்களிலும் ஜே.வி.பி.தான் முதலிடம் பெற்றது. இரத்னபுரியில் மாத்திரம் நான் முதலிடம் வந்தேன். என்னுடன் 4 பேர் அமைச்சரவையில் இருந்தனர். பல இராஜாங்க அமைச்சர் இருந்தனர். 10 ஆயிரம் குளங்கள் கட்டுவதாக நாடுபூராவும் 'போஸ்டர்' ஒட்டினார்கள். எதனை அநுர குமார கட்டினார்?, என்று கேள்வி எழுப்பினார்.

(ஒ-5)

## தவறான முறைப்பாடு: ஒருவர் மறியலில்

சாவகச்சேரி பொலிஸாருக்கு தவறான முறைப்பாடு வழங்கிய குற்றச்சாட்டிலும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனை மருத்துவர்களின் விடுதிக்குள் நுழைந்தமை தொடர்பிலும் மூவர் கைது செய்யப்பட்ட நிலையில் அவர்களில் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் முன்னாள் பதில் மருத்துவ அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா மருத்துவமனை விடுதிக்குள் தவறான முடிவெடுத்திருக்கலாம் என தெரிவித்து பொலிஸாருக்கு நேற்றுமுன்தினம் முறைப்பாடளிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த சாவகச்சேரி பொலிஸார் மருத்துவமனை விடுதி அறைக்கு வெளியே நின்று மருத்துவரை அழைத்தபோதும், அவர் வெளியே வராததால் சந்தேகமடைந்த பொலிஸார் விடுதி அறையை உடைத்து உள்ளே சென்றனர். இந்நிலையில் மருத்துவர் அர்ச்சுனா இராமநாதன் அங்கு சென்ற பொலிஸாருடன் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்தில் நின்ற மு.தம்பிராசாவையும் காணொலியை எடுக்க முயன்ற இருவரையும் என மூவரை பொலிஸார் கைது செய்தனர். சாவகச்சேரி பொலிஸார் விசாரணைக்கு பின்னர் மூவரையும் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தினர். விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் அடக்குமுறைக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் மு.தம்பிராசா விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். ஏனைய இருவரையும் பிணையில் விடுவித்து உத்தரவிட்டார்.

(ஒ-26)


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 23 . 01 . 1940

மறைவு 29 . 08 . 2024

எமது பாடசாலை சிரேஷ்ட ஆசிரியை
**திருமதி மேரி அருள்ராணி தவசீலன்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**அமரர் தேவசகாயம் யேசுராசா**
அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**ஆசிரியர் கழகம்**
(CS/56099) J-1 **நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை.**

## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை பேரின்பநாயகம்

வேலணை மேற்கு, 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தோணிக்கல், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பேரின்ப நாயகம் நேற்று (03.09.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (பிள்ளைகுட்டியர்) - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாதேவி, பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு கணவரும், அமரர் நவரத்தினம்மா, அமரர் நாகநாத பிள்ளை, அமரர் விநாயகமூர்த்தி, அமரர் இராஜகோபால், பாலசுப்பிரமணியம், இரத்தினசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜெயரூபன் (சுவிஸ்), மதிரூபன் (பின்லாந்து), உதயரூபன் (லண்டன்), யசிரூபன் (பின்லாந்து), விஜரூபன் (லண்டன்), ஜெகரூபன் (பின்லாந்து), கபிலரூபன் (சுவிஸ்), தசவதனி (வவுனியா), கஜரூபன் (வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதர்சனா, தர்சினி, ஸ்ரீதேவி, அமரர் சுபாசினி, சங்கீதா, அகல்விழி, ஞானேஸ்வரன் (பிரதி அதிபர், வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), கீர்த்திகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சாருஜன், கபிலாஷ், ஜதீசன், யுகன், சினோஜா, ஜிந்துயன், யதுசாயி, யதுமிலன், மிதுனன், லதுஷன், ஹரிஷ், தனுசன், சாய்சுருதி, கிஷாயினி, தஷானா, யக்ஷிகா, பிரமிகா, வினிஷ், சர்வினா ஆகியோரின் பாசமிகு பேரனும், அமரர் சண்முகநாதன், அமரர் விஜயலக்ஷ்மி, அமரர் பூபதி, திருவருட் செல்வி, சரோஜினிதேவி, கமலாதேவி, இராமச்சந்திரன், தவராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.09.2024 வெள்ளிக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் தோணிக்கல் இல்லத்தில் நடைபெற்று, பின்னர் வேலணை மேற்கு 7ம் வட்டாரத்தில் உள்ள அவரின் இல்லத்தில் மதியம் 2 மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, தகனக்கிரியைகளுக்காக வேலணை அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு இல:
077 066 2819 (மகள்)
077 421 3931 (மகன்)

தகவல்:
குடும்பத்தினர்

(CS 28590) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 13.01.1963



மறைவு 03.09.2024

### திருமதி விஜயலட்சுமி சண்முகவடிவேலு

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி திணைக்களம்)

யாழ். புத்தூரை பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயலட்சுமி சண்முகவடிவேலு அவர்கள் நேற்று (03.09.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.09.2024) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

375/8, முத்துதம்பி லேன்,
நாவலர் றோட், ஆனைப்பந்தி.

தகவல்: குடும்பத்தினர்.
077 [illegible]
077 2729286


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2025 ஜனவரியில் சம்பள உயர்வு

## ந்துரை ரணிலிடம் நேற்றுக் கையளிப்பு

**கொழும்பு, செப். 4**

**2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கான பரிந்துரைகளை உள்ளடக்கிய நிபுணர் குழுவின் இறுதி அறிக்கை, குழுவின் தலைவர் உதய ஆர்.செனவிரத்ன மற்றும் ஏனைய குழு உறுப்பினர்களால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து நேற்றுக் கையளிக்கப்பட்டது.**

இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாகவும் தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்க வேண்டும் என்ற திறைசேரியின் இணக்கப்பாடு மற்றும் அமைச்சரவையின் அனுமதியுடன் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக குழுவின் தலைவர் உதய ஆர்.செனவிரத்ன தெரிவித்தார்.

அரச துறையின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை மறுசீரமைப்பதற்கான நிபுணர் குழு அரச மற்றும் தனியார் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் 10 உறுப்பினர்களை உள்ளடக்கி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அமைச்சரவை அனுமதியுடன் நியமிக்கப்பட்டது. 18 விடயப்பரப்புகளின் கீழ் அரச சேவைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய சம்பள அதிகரிப்பு கொள்கைகள் தொடர்பில் பின்பற்ற வேண்டிய விடயங்கள் இந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

பொருளாதார வீழ்ச்சியை அடுத்து, அரசாங்கத்தின் வருவாயை அதிகரிக்க பல நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்தது. அப்போது, அரச ஊழியர்கள் கடுமையான வாழ்க்கைச் சுமை பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டனர். எத்தகைய பிரச்சினைகள் இருந்தாலும் ஒவ்வொருவரும் தமது பணிகளைச் சரியாகச் செய்தனர். அதன் காரணமாக, 2023ஆம் ஆண்டு நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி உயர்வடைந்து, பொருளாதாரம் வலுப்பெற்றது. 2024இல் பொருளாதார வளர்ச்சியுடன், அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பது குறித்து கவனம் செலுத்தினோம்.

அதற்கான அறிக்கையை உதய ஆர். செனவிரத்ன மற்றும் ஏனைய உறுப்பினர்கள் எமக்கு வழங்கியுள்ளனர். அதனை செயற்படுத்தும் பொறுப்புகள் நிதி அமைச்சிடம் கையளிக்கப்படும். இதனால் குழு அறிக்கையின் பரிந்துரைகளுக்கு அமைய அனைவருக்கும் சம்பள அதிகரிப்பு வழங்க முடியுமென நம்புகின்றோம், என்றார்.

நிபுணத்துவ குழுவின் தலைவர் உதய ஆர்.செனவிரத்ன, அடிப்படைச் சம்பளம் 24 சதவீதத்திலிருந்து 50% - 60% ஆக உயர்கிறது. இது அடிப்படைச் சம்பளம் 30 ஆயிரம் ரூபாவாக இதன்போது கருத்தில் கொள்ளப்பட்டிருப்பதுடன் இந்த அடிப்படை சம்பளம் 1 முதல் 6 விகிதத்தால் திருத்தம் செய்யப்படவுள்ளது.

அதேபோல் அரச சேவைக்குள் செய்ய வேண்டிய பல சீர்திருத்தங்கள் குறித்தும் பரிந்துரை செய்திருக்கிறோம். இந்த மறுசீரமைப்புகள் எதிர்வரும் காலங்களில் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டால் நாட்டில் சிறந்த பொதுச் சேவையை உருவாக்க முடியும். இதன் மூலம் சிறந்த பொது சேவையை வழங்கி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அரச பொறிமுறைக்கும் பங்களிப்பு செய்ய முடியும்- என்றார்.

(ஒ-இ)

**Apartment விற்பனைக்கு**
வெள்ளவத்தை IBC Road இல்
4 Bedrooms, Duplex Apartment
மற்றும் 3 Bedrooms Apartment உடனடி விற்பனைக்கு உண்டு. No Brokers P/S
(CR43152) J-1
Contact: 077 522 2613

### பொது அறிவித்தல்
### வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்திற்கான முன்மொழிவுகள் கோரல்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்திற்கான முன்மொழிவுகள் பொது மக்களிடமிருந்து கோரப்படுகின்றது. இம்முன்மொழிவுகளின் அடிப்படையிலும், வட்டார ரீதியாக இடம்பெறும் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்ட கலந்துரையாடலின் அடிப்படையிலும் முன்னுரிமைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். எனவே மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான பொதுமக்களின் எழுத்து மூலமான முன்மொழிவுகளினையும், கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளையும் 20.09.2024 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பின்வரும் ஏதேனும் வழிமுறை ஒன்றின் ஊடாக எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தபால் முகவரி : செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.
E.mail : secveps@yahoo.com
Face book ID : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
இணையத்தளம் : https://valikamameast.ps.gov.lk
Whatsapp No : 0743789536

**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
021-2058867
04.09.2024
(CR43151) J-1

**உங்கள் வெளிநாட்டு கனவை நனவாக்கிக் கொள்ள Edlocate உடன் இணைந்து கொள்ளுங்கள் !**



STUDY ABROAD DAY IN JAFFNA
SCHOLARSHIPS FOR HIGH ACHIEVERS*
ENTRANCE FREE
Australia | New Zealand | Canada | England | Ireland
SEP 07TH
நேரம்: 10.00 am முதல் 3.00 pm வரை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கலை அரங்கம் ( Arts Seminar Hall )
PROCESS YOUR APPLICATION WITH US FOR 2025 INTAKES
FOUNDATION | DIPLOMA | DEGREE | MASTERS | PHD
முற்பதிவுகளை மேற்கொள்ள:
077 222 3178 | 021 570 0750
Follow Us On
edlocate Reach Light Beyond Borders www.edlocate.lk
நாம் 24 ஆண்டுகால அனுபவம் மிக்க தொழில் வழிகாட்டிகள்

# வாக்குறுதிகளை நீக்குங்கள்

## சஜித், அநுரவிடம் ரணில் கோரிக்கை

கொழும்பு, செப். 4

அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகளை நான் தற்போது மேற்கொண்டிருப்பதால், ஐக்கிய மக்கள் சக்தியும், மக்கள் விடுதலை முன்னணியும் தமது தேர்தல் அறிக்கைகளில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பான வாக்குறுதிகளை நீக்கிக்கொள்ள வேண்டுமென பெல்மடுல்ல சந்தை தொகுதி வளாகத்தில் நேற்று நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' பொதுக்கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க கோரியுள்ளார்.

(ஒ-இ)

### பிற்போடப்பட்டுள்ளது

பார்வையற்றோருக்கான அறக்கட்டளை நிலையத்தின் 04.09.2024 அதிஷ்டம் பார்க்க இருந்த அதிஷ்டலாபச்சீட்டிழுப்பானது தவிர்க்க முடியாத காரணத்தால் 03.12.2024 சர்வதேச ஊனமுற்றோர் தினத்தன்று சங்கமம் வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்ற முகவரியில் மாலை 4.30 மணியளவில் அதிஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

**-நிர்வாகசபையினர்.**

### உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோவில் குருக்கள் தேவை

மேற்படி எமது வரலாற்றுப் பிரசித்தமான தொன்மையான ஆலயத்தில் நித்திய, நைமித்தியக் கிரியைகளை ஆசார சீலத்துடன் பக்தி பூர்வமாக நேர்த்தியாக நிறைவேற்ற பிராமணக் குருக்கள் தேவைப்படுவதனால் தகுதியானவர்கள் 15.09.2024 இற்கு முன்பதாக நேரிலோ அல்லது செயலாளர், உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோவில் எனும் முகவரிக்கு விண்ணப்பத்தை அனுப்பி வைக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**மேலதிக தகவல்களுக்கு,**
**077 844 8662**
**[illegible]**
**076 358 3331**

**பரிபாலன சபையினர்,**
**உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு
04 . 06 . 1951

இறப்பு
03 . 09 . 2024

## வேலுப்பிள்ளை விக்கினேஸ்வரன்

**(மக்கள் வங்கி - ஓய்வூதியர்)**

சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், ஆஸ்பத்திரி வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை விக்கினேஸ்வரன் (மக்கள் வங்கி ஓய்வூதியர்) அவர்கள் நேற்று (03.09.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - மனோன்மணி தம்பதியரின் மருமகனும், செல்வமலர் அவர்களின் அன்புக் கணவரும், மங்களதாஸ் (ஜேர்மனி), காலஞ்சென்ற திலகதாஸ் மற்றும் மகீண்டா ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஸ்ணமீரா, வசந்தி ஆகியோரின் மாமாவும், ரூபிகா, சஷ்விகா, குட்டி ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, இராசரத்தினம் மற்றும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற தனபாலசிங்கம் ஆகியோரின் சகோதரனும், கனகாம்பிகை, காந்திமதி, சிவகாமிஅம்மை, ஜெகசோதி, காலஞ்சென்ற நாகதேவி மற்றும் சிவயோகமலர், கணேசானந்தமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆஸ்பத்திரி வீதி,**
**சங்கானை**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(CS/56101) J-1

# மரண அறிவித்தல்



## வாமதேவன் ஞானசோதி

**(இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர், யாழ் போதனா வைத்தியசாலை)**

கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வாமதேவன் ஞானசோதி அவர்கள் நேற்றுமுன்தினம் (02.09.2024) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா - தாட்ஷாயினி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - பாக்கியம் தம்பதியரின் மருமகளும், வாமதேவன் (யாழ் போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்பு மனைவியும், சாம்பவியின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சேதுபதி மற்றும் அமிர்தகௌரி, கலாகரன், உமாபதி, ஜெகசோதி (விமலி), கமலவதி, ரகுபதி, சீதாலட்சுமி ஆகியோரின் சகோதரியும், ஸ்ரீவனஜா, வரதராஜர், விஜயலஷ்சுமி, தயாபரன், பாமினி, கந்தபேசன், பாக்கியநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.09.2024) வியாழக்கிழமை முற்பகல் 08.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
077 624 8327

**கருவப்புலம் வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

(CS/56097) J-1

# ஆண்டுகள் பதினெட்டு

## அமரர் சுப்பிரமணியம் பசுபதி

**திதி: துதியை (04.09.2024) புதன்கிழமை**



**தோற்றம்**
**29.11.1935**

**மறைவு**
**26.08.2006**

*ஆண்டுகள் பதினெட்டு ஆனதுவோ*
*அப்பா!*
*நீங்கள் அருகிருந்தெம்*
*மனம் நிறைந்த*
*ஆதரவுக்கேங்குகின்றோம்!*
*வழிகாட்டும் ஒளியாய் -*
*எம் விழியாய்*
*உங்கள் வார்த்தைகள்*
*எம்மோடு என்றும் வாழும்*
*வணங்குகின்றோம்.*

**குடும்பத்தினர்.**

**'பசுபதீயம்'**
**கலாசாலை வீதி**

# மரண அறிவித்தல்



மண்ணில்
03 . 06 . 1961

விண்ணில்
02 . 09 . 2024

## பரமு கலைவாணன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பரமு கலைவாணன் அவர்கள் கடந்த 02.09.2024 அன்று காலமானார்.

அன்னார் பானுமதியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற பரமு -தங்கம்மா தம்பதியரின் கனிஸ்ட புதல்வரும், காலஞ்சென்ற அம்பலம்-தவமணியின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற பழனித்துரை (இளைப்பாறிய மாநகரசபை ஊழியர்) காலஞ்சென்ற நவரத்தினம் (இளைப்பாறிய மாநகரசபை உத்தியோகத்தர்) மற்றும் செல்வதி, செல்வராணி, செல்வராசா (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்), காலம்சென்ற யோகராசா (தொடருந்து நிலைய உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலம்சென்ற சிங்கராசா (இளைப்பாறிய ஆசிரியர்), காலம்சென்ற பண்டிதர் (இளைப்பாறிய மின்சாரசபை உத்தியோகத்தர்), சறோஜினிதேவி, புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் காலஞ்சென்ற அன்பழகன் மற்றும் மரூபியா (ஆசிரியை நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி), தேவப்பிரியா (ஆசிரியை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்), வசந்த் (லண்டன்), கார்த்திகா (கனடா), சுனீத்ரா, ஜெயந்த், மயூறிக்கா (விரிவுரையாளர்- யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் சிறிய தந்தையும், கனீசியஸ்ராஜா (லண்டன்), திருலோகநாதன் (லண்டன்), கனீந்திரவதி (ஆசிரியை சாவகச்சேரி இந்துக்கல்லூரி), கனீந்திரராஜ் (லண்டன்), இரவீந்திரவதனி கனிஸ்ரெலாவதனி, தர்மினி (கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), விஜயகுமார் (உள்ளக கணக்காய்வு உதவியாளர் - மாவட்ட செயலகம் மன்னார்) ஆகியோரின் அன்புத் தாய்மாமனாரும், கிருபாகரன் (லண்டன்), காலஞ்சென்ற கருணாகரன் மற்றும் பாஸ்கரன், மனோகரன் (லண்டன்), வளர்மதி (பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்), ஜெயகரன் (லண்டன்), இந்துமதி (லண்டன்), சுரேஸ்கரன் (லண்டன்), வசந்தமதி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், பிறேமராணி, றோசி, ஸ்ரீரஞ்சினி, பத்மராணி, கிருஸ்ணகுமார் (மக்கள் வங்கி உத்தியோகத்தர் ), மதிவதனி, மோகனராஜ், சுரேந்தினி, ஜெயசந்திரன் ஆகியோரின் சகலனும், வேணுகா, சோபிகா, லக்சிகா, பிரகாஷ், பிரியா, தருணிகா, டிலோஜன், சிரோசன் ஆகியோரின் பெரிய தந்தையும், கெவின், மேவின், சுருதி, ஜோய், ஜக்கி, தீபிகன், பிரகாஸ், மதுமிதா, சிவகரீஷ், ராஜினி, ஷாளினி காலஞ்சென்ற துலக்ஷன், நிலூஷிகா, மேஷாக், அர்விந், நிஷாரா, அஸ்வின், ஆர்த்விகா, பிரீத்திகா, யாதவ், பிரிஷிகா, தன்சி, லுஸ்டிகா, கவாஸ்கர், ஜெரோமி, அபிஷேக், மெலானா, ஷஜானா, பிரணவன், பிரவீனா, பிரவீன்ன் வேஜினி, தானியா, இமானுவேல், அபிமன், யதேஜன், தனஜன், ஜெயஸ்வினி, பிரயஸ்வினி, கரீஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், ரித்விக்ஷாய், தேயஸ்வின்சாய், டவின் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2024) புதன்கிழமை இலக்கம் 104 ஆசீர்வாதப்பர் வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு :**
**[illegible] செல்வராசா -0778853282**
**மைத்துனர் பாஸ்கரன் - 0778472132**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 1063) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்களை...

ரின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்ப் பொதுவேட்பாளரின் தேர்தல் அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது. அதில் மேலும் முக்கியமாக தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இப்பொழுது தென்னிலங்கையில் வேட்பாளர்களாகக் களமிறங்கியுள்ள அனைவரும் பொருளாதார நெருக்கடி எனப்படுவது இனப்பிரச்சினையின் விளைவுதான் என்பதனை மறைக்கின்றனர். இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணாமல் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கமுடியாது என்ற ஆழமான உண்மையை எந்த ஒரு தென்னிலங்கை வேட்பாளரும் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுடைய பரப்புரையின் குவிமையமாக இருப்பது நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து எப்படி மீட்டெடுப்பது என்பதுதான். இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகத் தமிழ் மக்களால் ஏற்கத்தக்க பொருத்தமான முன்மொழிவு எதனையும் அவர்களில் யாரும் இதுவரை முன்வைக்கவில்லை.

தமிழ் மக்களுக்கு பொருளாதாரப் பிரச்சினைகள்தான் உண்டு என்று தொடர்ச்சியாக ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் கூறிவரும் ஒரு பின்னணியில் இனப்பிரச்சினையைப் பேசுபொருளாக்கி அதன்மீது தென்னிலங்கையின் கவனத்தையும் உலகத்தின் கவனத்தையும் ஈர்க்கும் நோக்கத்தோடு, தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினராகிய நாம் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளராக பாஅரிய நேத்திரனை முன் நிறுத்துகிறோம்.

கடந்த 46 ஆண்டுகளாக ஜனாதிபதித் தேர்தல்களில் தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு பதில் வினையாற்றும் அணுகுமுறையில் இருந்து வேறுபட்டு இந்த முறைதமிழ்மக்கள் செயல்முனைப்போடு ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வது என்று எடுக்கப்பட்ட முடிவின் விளைவே தமிழ்ப் பொது வேட்பாளர் ஆகும்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் தமிழ் மக்களை ஓரணியாகத் திரட்டுவார். அதேசமயம், இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கித் தமிழ் மக்களின் கூட்டு விருப்பத்தை உலக சமூகத்துக்கும் தென்னிலங்கைக்கும் வெளிப்படுத்துவார். இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியையும் கோருவார். இந்த அடிப்படையில், தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பானது இனப்பிரச்சனைக்கான நிரந்தர தீர்வானது பின்வரும் அடிப்படைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று உறுதியாக வலியுறுத்துகின்றது.

**இறைமையுள்ள இனமாக ஏற்கப்படவேண்டும் தமிழர்கள்**

இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்தோடு உருவாக்க வேண்டிய இலங்கைத்தீவின் புதிய அரசமைப்பானது தமிழ் மக்களை இறைமையும் சுயநிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொண்டால்தான் இலங்கைத் தீவின் பல்லினத் தன்மையை உறுதிப்படுத்தலாம். எனவே புதிய அரசமைப்பானது இலங்கைத் தீவின் பன்மைத் தேசியப் பண்பை உறுதிப்படுத்தும் விதத்தில் தேசங்களின் ஒன்றிணைவாக அமைய வேண்டும்.

ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்த ஒரு அரசியல் தீர்வாலும் தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை ஒருபோதும் திருப்திப்படுத்த முடியாது. இந்த விடயத்தில் தமிழ் மக்கள் தங்களுக்கு என்ன தீர்வுவேண்டும் என்பதனை தாமே நிர்ணயிப்பதற்குப் பொருத்தமான பன்னாட்டு ஏற்பாடுகளைக் கோருவதற்கு உரித்துடையவர்கள்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான அலகானது ஒன்றிணைந்த தற்போதைய வடக்கு கிழக்கு மாகாணங்களை எல்லையாகக் கொண்டு அமைய வேண்டும். குறித்த சுயநிர்ணய அலகிற்குள் முஸ்லிம் மக்களின் நியாயமான அரசியல் உரிமைகள் தொடர்பில் திறந்த மனதோடு பேச்சு நடாத்த தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புத் தயாராக உள்ளது.

**மலையக மக்களின் தனித்துவமும் உறுதியாகப் பேணப்படவேண்டும்**

மலையகத் தமிழ் மக்களின் தனித்துவமான தேசிய இருப்பை நாம் அங்கீகரிக்கின்றோம். அந்த அடிப்படையில் அவர்களுக்கு நிரந்தர தீர்வு வழங்கப்படவேண்டும். மேலும் உடனடி பிரச்சினைகளுக்கு அவர்கள் தொடர்ச்சியாகக் கோரிவரும் தீர்வுகளும் வழங்கப்பட வேண்டும். இத்தீர்வுகளுக்கான போராட்டத்தில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பானது மலையகத் தமிழர்களோடு தோளோடு தோள் நிற்கும்.

ஈழத் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு நடத்திய இன அழிப்பு, போர்க் குற்றங்கள்;, மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பன்னாட்டு நீதித்துறைக் கட்டமைப்புக்கூடாக முழுமையாகவும் முறையாகவும் விசாரிக்கப்பட்டு, பரிகார நீதி வழங்கப்படுவதுடன், இன அழிப்புச் செயற்பாடுகள் மீள நிகழாமையை உறுதி செய்ய வேண்டும். இதுவரையிலுமான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களின் தொகுக்கப்பட்ட அனுபவமாக ஐ.நா. பொதுச் செயலர் பொறுப்புகூறலை ஐ.நா. பொதுச் சபையிடம் பாரப்படுத்துவதன் மூலம் இன அழிப்புக்கு எதிரான பன்னாட்டு விசாரணைகளை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றங்களிடம் பாரப்படுத்த வேண்டும்.

அபிவிருத்தியின் பெயரால் மேற்கொள்ளப்படும் நிலப்பறிப்பைத் தடுக்கவும், நமது வளங்கள் இன அழிப்பின் ஒரு பகுதியாகச் சுரண்டப்படுவதைத் தடுக்கவும் தமிழர் தாயகத்தின் தேசிய வளங்களை இயற்கையின் சமநிலை குலையாத வகையில் வினைத்திறனுடன் பயன்படுத்தவல்ல தற்சார்பு பொருளாதாரக் கட்டமைப்புகளை நாம் உருவாக்க வேண்டும்.

இதற்கேற்ற வகையில் தமிழர் தாயகத்தின் பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளையும் உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீடுகளையும் உள்வாங்கும் அதிகாரம் தமிழர் தேசத்துக்கு இருக்க வேண்டும். தமிழ்க் கடலில் தமிழ் மீனவர்களுடைய கடல் இறைமை உறுதி செய்யப்படவேண்டும்.

ஒரு நிரந்தரத் தீர்வைக் கண்டடைவதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில், தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பு நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கத்தோடும், தமிழர் தேசத்தின் இருப்பைப் பாதுகாக்கும் நோக்கத்தோடும் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கென்று பன்னாட்டு சமூகத்தின் மேற்பார்வையின்கீழ் விசேட இடைக்காலப் பாதுகாப்பு ஏற்பாடு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் நிலைப்பாட்டை ஏற்றுத் தமிழ் மக்கள் இதுவே தமது பொது நிலைப்பாடு என்று உலகுக்கும் தென்னிலங்கைக்கும் வெளிக்காட்ட பொதுக் கட்டமைப்பின் பொது வேட்பாளராகிய பா.அரிய நேத்திரனின் சங்குச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்று அன்புரிமையோடு வேண்டி நிற்கின்றோம் - என்றுள்ளது. (அ-ஒ-66-20-100)

## நல்லவற்றுக்காக...

சஜித் பிரேமதாஸ தலைமையில் மிஹிந்தலை பிரகடனம் வெளியீட்டு வைபவம் மிஹிந்தலை ரஜ மஹா விஹாராதிபதி உள்ளிட்ட நூற்றுக்கணக்கான மகா சங்கரத்தினருக்கு மத்தியில் மிஹிந்தலை நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் அதிகாரத்துக்கு வந்த பிறகு நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை தன்னிச்சையாகப் பயன்படுத்தமாட்டேன். இது பதவி அல்ல. மக்களின் வரத்தின் ஊடாக மக்கள் சேவகனாக நிறைவேற்ற வேண்டிய கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவேன். நிறைவேற்று ஜனாதிபதி என்பது வரி செலுத்துகின்ற மக்களிடத்தில் தங்கி இருக்கின்ற ஒருவரே அதனால் அதில் சார்ந்திருப்பதிலிருந்து விலகி நிற்பேன். அந்த வட்டத்துக்குள் இருந்து வெளியேறி, புதிய சிந்தனையோடு வங்குரோத்தடைந்த நாட்டை வங்குரோத்து நிலைமையிலிருந்து கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். நாட்டுக்கு சாதகமான விடயங்களுக்காக அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவேன். அதன் ஊடாக நாட்டுக்குத் தேவையான வளங்களையும் சுபீட்சத்தையும் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுப்பேன்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் எந்த விதத்திலும் மக்களுக்கு சுமையாக இருக்காது. ஒரு முன்னுதாரணமான அரசாட்சி ஒன்று நடத்தப்படும். மக்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு முன்னர் தலைவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். தசராஜ தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு முன்மாதிரியான பணிவான செவிசாய்க்கக்கூடிய அரசாட்சிஒன்று எமது நாட்டுக்குத் தேவை. அதற்காகதான் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன். எமது நாட்டில் அனைவருக்கும் கிடைக்கின்ற வகையில் சுபிட்சமான, அனைவரும் அனுபவிக்க கூடிய பொருளாதார அபிவிருத்தியோடு, புத்த தர்மத்தை கேந்திரமாகக் கொண்டு ஏனைய மதங்களுக்கும் பலத்தை கொடுக்கும் வகையில் ஒழுக்கமான, நியாயமான, பண்புள்ள, நாகரீகமான விழுமியங்களை பேணக் கூடிய, சமாதான விருத்தியைக் கொண்ட, வளமான நாடொன்றை கட்டியெழுப்ப கூடிய யுகத்தை உருவாக்குவோம்.

அனைவருக்கும் அபிவிருத்தியையும் சுபீட்சத்தையும் கொண்டு வருகின்ற நீர்ப்பாசன கலாசாரத்தின் ஊடாக, செழிப்பான வயல் நிலங்களுடன் கூடிய மகிழ்ச்சிகரமான வாழ்க்கை ஒன்றை எதிர்பார்க்கும் பிரகடனம் இந்த மிஹிந்தலை பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்களுக்காக நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. துன்பத்தில் இருக்கின்ற மக்களை துன்பத்திலிருந்து மீட்டெடுத்து சுபீட்சத்தை நோக்கி செல்வோம். தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் மூலமாக உருவாகின்ற ஒற்றுமையின் ஊடாக நாட்டை வெற்றியின் பக்கம் எடுத்துச் செல்வது எமது நோக்கமாகும்.

பல்வேறுபட்ட மக்கள் பல மதங்களைச் சார்ந்தவர்கள் மற்றும் ஆதிவாசிகள் உட்பட அனைவரையும் ஒன்றிணைத்துக் கொண்டு பலத்தை உருவாக்குவோம்.

பல்லின மக்கள் வாழ்கின்ற எமது நாட்டின் அபிவிருத்திக்கான பிரதான அடித்தளமான இந்த ஒற்றுமையின் ஊடாக உருவெடுக்கின்ற மிகப்பெரிய சக்தியின் மூலம் வீழ்ச்சி அடைந்துள்ள இந்த நாட்டை கட்டி எழுப்ப நடவடிக்கை எடுப்போம் - என்றார். (அ-ஒ-இ)

## மாகாணசபைத்...

ரான காலத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நல்லாட்சிக் காலத்தில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவால் அப்போது நடைமுறையில் இருந்த மாகாணசபைத் தேர்தல் சட்டம் இல்லாதொழிக்கப்பட்டது. புதிய சட்டம் கொண்டு வரப்படும் எனச் சொல்லப்பட்டு எல்லை நிர்ணயக் குழப்பம் காரணமாக இறுதியில் சட்டம் கொண்டு வரப்படாமையால், மாகாணசபைகளுக்கான தேர்தல் இதுவரை நடைபெறவில்லை. இதனால் பழைய மாகாணசபைத் தேர்தல் சட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக்கொண்டு வந்து மாகாணசபைத் தேர்தல் களை நடத்தலாம் என்ற யோசனையை முன்வைத்து அதற்கான சட்டவரைவை தனிபர் பிரேரணையாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சமர்ப்பித்திருந்தார்.

அது தொடர்பான இரண்டாவது வாசிப்பு நாடாளுமன்றில் முடிவுற்றிருந்தது. அந்தத் திருத்தச் சட்டவரைவு மூன்றாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டு முழுமையாக நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்திருந்தார்.

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், ஜனாதிபதிக்கு நேற்றுமுன்தினம் அழைப்பு எடுத்துப்பேசியபோது, மூன்றாம் வாசிப்புக்காக இந்தத் திருத்தச் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும், சபாநாயகருக்கு இது தொடர்பில் தெரியப்படுத்துவதாகவும் ஜனாதிபதி கூறியிருந்தார். ஆனால் நேற்றுத் திடீரென அது நாடாளுமன்றத்தின் ஒக்ரோபர் இரண்டாம் வார நிகழ்ச்சி நிரலுக்கு பின்தள்ளப்பட்டது. (அ-ஒ-இ)

## புதுமாற்றத்துடன்...

ஒக்ரோபர் 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எனினும், ஜனாதிபதித் தேர்தலில் அநுர குமார திஸாநாயக்க வெற்றிபெற்றால் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சஜித் பிரேமதாஸ வெற்றிபெற்றால் குறுகிய காலப்பகுதிக்குள் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு திட்டமிட்டுள்ளார். தற்போதைய நாடாளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்பட்டு, புதிய தொடரே அவர் தலைமையில் ஆரம்பமாகும்.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றால், இடைக்கால வரவு-செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எனவே அரசியல் ரீதியிலான மாற்றங்களின் பின்னரே அடுத்த சபை அமர்வு இடம்பெறவுள்ளது. (அ-ச-44)

## ஜனாதிபதித்...

பொலிஸார், மாவட்டச் செயலகம் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் கடமையாற்றுபவர்களுக்கான வாக்குப் பதிவுகள் இன்று இடம்பெறவுள்ளன. தொடர்ந்து ஏனைய அரச பணியாளர்களுக்கான தபால்மூல வாக்குப் பதிவுகள் நாளையும், நாளைமறுதினமும் இடம்பெறவுள்ளன. (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களோடு...

எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அத்துடன், மாகாணசபை தேர்தல் திருத்தச்சட்டவரைவை கடைசி நேரத்தில் தடுத்து நிறுத்தியுள்ளமையானது ஜனாதிபதியின் இனவாதச் செயற்பாடாகும் எனவும் அவர் சுட்டிகாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளார். ஒன்றையும் அவர் செய்யவில்லை. மாகாணசபை தேர்தல் திருத்தச்சட்டவரைவையும் அவர் கடைசி நேரத்தில் தடுத்து நிறுத்தியுள்ளார். இது எமது மக்கள்மீது வெறுப்பைக் காட்டுகின்ற செயலாகவே உள்ளது. மேற்படி நடவடிக்கைமூலம் தான் யாரென்பதை ஜனாதிபதி மீண்டும் மக்களுக்கு நிரூபித்திருக்கின்றார்.

வாய்மூலம் வாக்குறுதிகளைக் கொடுப்பதும், அவற்றை நிறைவேற்றுவதுபோல் காட்டுவதும், இறுதி தறுவாயில் கடைசிப்படி ஏறப்படும் நடவடிக்கையை எடுக்காமல் இருப்பதும் தனது சுபாவம் என்பதை ஜனாதிபதி இந்தத் தருணத்திலும் காண்பித்துள்ளார்.

தனக்கு வாக்களிக்காமல் இருப்பதற்கான தீர்மானத்தை பிரதான தமிழ்க் கட்சி எடுத்துள்ளதால் தமிழ் மக்களை தண்டிப்பதற்காகவே ஜனாதிபதி இவ்வாறு செய்துள்ளார். அரைகுறைத் தீர்வாக இருந்தாலும்கூட இருக்கின்ற மாகாணசபைகளை நடத்தவிடக்கூடாது என்பதற்காக இவ்வாறு மோசமான நடத்தையில் ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க இறங்கியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதில்லை என இலங்கைத் தமிழரசுக் கட்சி கடந்த முதலாம் திகதி எடுத்த முடிவு சரியென்பதையே ஜனாதிபதியின் இந்த நடத்தை நிரூபிக்கின்றது.

பிரதான எதிர்க்கட்சி தலைவருக்கு ஆதரவளிக்கின்றபோது அவருக்கும் இதனை ஒரு எச்சரிக்கையாக சொல்லி வைக்க விரும்புகின்றேன். எங்களோடு இணங்குகின்ற விடயங்களை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். இல்லையென்று சொன்னால் இந்தநாடு அழிவுப் பாதைக்குள் செல்லும்.

கடந்த முறையும் எமது மக்கள் அவருக்கு பெருவாரியாக வாக்களித்திருந்தனர். இந்த தடவையும் தமிழ் மக்கள் எதிர்க்கட்சி தலைவருக்கு வாக்களிப்பார்கள். எனினும், நாடு பூராகவும் அவர் வெளிப்படையாகக் கூறியிருக்கின்ற விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் - என்றார். (அ-ஒ-44)

## மோசடி...

விடயம். இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அவரது இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:-

அநுரகுமார ஜனாதிபதியாகத் தெரிவானால் நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான திட்டங்களோ அல்லது சர்வதேச ஒத்துழைப்பையோ அவரால் பெறமுடியாது. நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்ப வேண்டுமானால் அவர்கள் சீனாவின் உதவியை நாட வேண்டிய தேவை ஏற்பாடும். ஏற்கனவே நாடு சீனாவின் கடன்பொறிக்குகள் சிக்கியுள்ள நிலையில் நாட்டு மக்கள் அதனை விரும்ப மாட்டார்கள்.

அது மட்டும் அல்ல தேசிய மக்கள் கட்சியினர் சீனாவின் கொள்கைகளுடன் ஒத்துப்போகும் நிலையில் அவர்களின் ஆட்சி வருவார்களானால் இலங்கை தீவின் பிராந்திய அமைதிக்கு பங்கம் ஏற்படும்.

என்னைப் பொறுத்தவரையில் அநுரவுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள். ஏனெனில் வடக்கு கிழக்கை பிரித்தவர்கள், 1983ஆம் ஆண்டு கலவரத்தின் பின்னணியில் பல தமிழ் மக்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்தவர்கள் ஜே.வி.பி.யினர். இப்போது தேசிய மக்கள் சக்தி என்ற பெயருடன் தேர்தலில் களம் இறங்கியுள்ளனர் - என்றார். (அ-ஒ-27)

## மருத்துவர்கள்...

இடமாற்றங்கள் வழங்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும், வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப மருத்துவர்களின் ஊதியங்களும் அதிகரிக்கப்பட வேண்டும், சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்தும் தொழிற்சங்கத் தலைவர்களை ஒடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் கைவிடப்பட வேண்டும் உள்ளிட்ட வலியுறுத்தல்களை முன்வைத்தே இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-100-23-26-113-110)

## விவசாயக்...

குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த அறிவிப்பு நேற்று திடுதிடுப்பென வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தனது தேர்தல் அறிக்கையில் விவசாயிகளின் விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்வேன் என அறிவித்திருந்தார். தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார, விவசாயக் கடன்கள் தொடர்பில் சலுகைகள் வழங்கப்படும் என தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)


### வேலையாட்கள் தேவை

யாழ். நகரை அண்டிய பகுதியில் பலசரக்கு கடையொன்றிற்கு வேலையாட்கள் தேவை.
தொடர்புகளுக்கு:-
**077 116 5752**
(CS/56100) J-1

### காணி விற்பனைக்கு

இல. 38 நல்லூர் இராணி வீதியில் அமைந்துள்ள 1 பரப்புக் காணியும், புதிதாகக் கட்டப்பட்ட வீடும் விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
**077 280 3758**
(CS/56078) J-1

### விற்பனைக்கு

London ல் இருந்து கொண்டுவரப்பட்ட (பாவிக்கப்பட்ட)



DJI Panthom - 4 Drone
விற்பனைக்கு உண்டு.
விலை : 300,000/-
**077 991 9992, 077 166 3859**
(CS/56092) J-1

### வீடு வாடகைக்கு உண்டு

கொக்குவில் கிழக்கு கொக்குவில் 4ம் ஒழுங்கை அம்மன் வீதியில் 4 அறைகளைக் கொண்ட புதிதாக அமைக்கப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய வீட்டின் மேல் பகுதி வாடகைக்கு உண்டு. சைவ உணவுப் பழக்கம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
மாதாந்த வாடகை - 40000/-
தொடர்புகளுக்கு :-
**076 772 0059, 077 166 3859**
(CS/56091) J-1

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராயில் பிரதான காப்பெற் வீதி முகப்புடன் **6 பரப்புக் காணி- நிலப்பரப்பு** விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- உரும்பிராய் சந்தியிலிருந்து 1/2 KM தூரம்.
- வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும், வீடு கட்டுவதற்கும் உகந்தது.

தொடர்புகளுக்கு:
**077 2880 152**
**077 2941 521**

### 1ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 27 . 09 . 1946



மறைவு 16 . 09 . 2023

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும்,
முரசுமோட்டை மற்றும் மன்னார் றோட் 4 ஆம் கட்டை சிவபுரம்
வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் **சுப்பிரமணியம் சிவராஜா** (கிளி)

**திதி: 04.09.2024**

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள்
விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

மன்னார் வீதி, 4ம் கட்டை
சிவபுரம், வவுனியா.

(CS/28440) J-1


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org